நீயுமுளையோ வெனிற்கருடன்சென்ற நீள்விசும்பி
லீயும்பறக்கு மிதற்கென்கொலோசொல்லுமேந்திழையே.

நாமேவெழுத்துச்சொல் நற்பொருள் யாப்பலங்காரமென்னும்
பாமேவுபஞ்ச வதிகாரமாம் பரப்பைச்சுருக்கித்
தேமேவியதொங்கற் றேர்வீரசோழன் றிருப்பெயராற்
பூமேலுரைப்பன் வடநூன்மரபும் புகன்றுகொண்டே.

பாயிரம் முற்றும்.

முதலாவது—எழுத்ததிகாரம்.

சந்திகாரியப்படலம்.

அறிந்தவெழுத்தம் முன்பன்னிரண்டாவிகளானகம்முன்
பிறந்தபதினெட்டு மெய்நடுவாய்தம்பெயர்த்திடையா
முறிந்தனயம்முதலாறுங ஞ ண ந ம ன வென்று
செறிந்தனமெல்லினஞ் செப்பாவிருமூன்றும்வல்லினமே *

---

* "செப்பாதவல்லினஞ் சேயிழையே" என்றும் பாடம்.

(இதன்பொழிப்பு) அறியப்பட்ட வெழுத்துமுறைமையின்கண் முடிபடையப் பன்னிரண்டெழுத்துமாவியெனப்படும். மெய்யெனினும் உடம்பெனினும் உறுப்பெனினும் ஒற்றெனினுமொக்கும். ஒற்றின்மேலேறிநின்ற அகரம் உச்சரித்தற்பொருட்டெனக்கொள்க. உயிரெழுத்திற்கு மெய்யெழுத்திற்கு நடுநின்றவெழுத் தாய்தமெனப்படும். குற்றெழுத்தின்மூனாய்தம் வல்லெழுத்துப்பின்பு பெற்றுவரு மாய்தத்தினையீண்டு நடுவென்று சொல்லப்பட்டது. யகரமுதலாய்க்கிடந்த ஆறுமிடையினம்; அவை ய-ர-ல-வ-ழ-ள என்ப. ங-ஞ-ண-ந-ம-ன வென்னுமாறெழுத்து மெல்லினமெனப்படும். ஒழிந்த க-ச-ட-த-ப-ற வென்னுமாறும் வல்லினமெனப்படுமென்றவாறு.

* * * *

இரண்டாவது.—சொல்லதிகாரம்.

வேற்றுமைப்படலம்.

எட்டாமெழுவாய் முதற்பெயர்வேற்றுமையாறுளவாங்
கட்டார்கருத்தாமுதற் காரகமவைகட்டுரைப்பி
லொட்டார்கருத்தா கருமங் கரணமொண்கோளியொடுஞ்
சிட்டாரவதியொ டாதாரமென்றறிதேமொழியே.

(இதன்பொழிப்பு) எழுவாய் வேற்றுமைமுதலாக் காரகபத வேற்றுமையெட்டுள; அவைதாம் எழுவாய்வேற்றுமையும், இரண்டாம் வேற்றுமையும், மூன்றும்வேற்றுமையும், நான்காம்வேற்றுமையும், ஐந்தாம்வேற்றுமையும், ஆறும்வேற்றுமையும், ஏழாம்வேற்றுமையும், விளிவேற்றுமையுமெனக்கொள்க. காரகபதமாவன—கருத்தாகாரகமுங், கருமகாரகமுங், கரணக்காரகமுங், கோளிக்காரகமும், ஆதாரக்காரகமும், அவதிக்காரகமும் என அவற்றுட்காரகபதமாறும், எ-று.

* * * *

மூன்றவது.—பொருளதிகாரம்.

பொருட்படலம்.

ஆற்றுமகமே புறமேயகப்புறமன்றிவென்றி
போற்றும்புறப் புறமென்றும்பொருளளப்பானளவை
யேற்றுமிரவியமென்றும் வழங்குமிவையன்றியே
சாற்றும்புலவருமெண்ணிறந்தஃதென்பர்தாழ்குழலே.

(இதன்பொழிப்பு) பொருளாவது அகப்பொருளும், அகப்புறப்பொருளும், புறப்பொருளும், புறப்புறப்பொருளும் என நான்குவகைப்படும். அளப்பானும், அளவையும், அளக்கப்படும்பொருளும் என மூன்று

வகைப்படும் எனக்கொள்க. மற்றும் பலவேறுபாட்டானும் வகுப்பாரு முளரெனக்கொள்க. 'இரவியமாவது' அளக்கப்படும்பொரு ளெனக் கொள்க.

* * * *

நான்காவது — யாப்பதிகாரம்.

யாப்புப்படலம்.

குறிலும்நெடிலும்விட வரினேரசைகுற்றெழுத்துப்
பெறின்முன்பிவையே நிரையசையாம்பிழைப்பில்லைபின்பொற்
றுறினுமசையிரண்டொன்ற முற்சீர்மூவசையொன்றினே
ரிறினுமிடைச்சீர் நிரையிறிற்பிற்சீரெனவியம்பே.

(இதன் பொழிப்பு) குற்றெழுத்துத்தனியேவரினும் நெட்டெழுத்துத்தனியேவரினும் நேரசையாம். இவற்றின்முன் பொருகுற்றெழுத்துப்பெற்றுக் குறிலிரண்டிணைந்துவரினும் நெடிலிணைந்துவரினும் நிரையசையாம். அவற்றின்பின் பொற்றுப்பெற்றுக் குற்றெழுத்தொற்றடுத்துவரினும் நெட்டெழுத்தொற்றடுத்துவரினும் நேரசையாம். குறிலிணையொற்றடுத்துவரினும் குறில்நெடில்(இணைந்து) ஒற்றடுத்துவரினும் நிரையசையாம். எனவே, நேரசைநான்கும் நிரையசைநான்குமாயின. அவை யிரண்டசையொன்றினபொழுதும் (ஓரசையே நின்று சீரானபொழுதும்)முதற்சீரென்பனவாம். மூன்றசையொன்றி அவற்றினிறுதி நேரசையாய்வரின் இடைச்சீரென்பனவாம். இன்னுமவற்றினிரையசைவரிற் கடைச்சீரென்பனவாம், எ-று.

* * * *

ஐந்தாவது.— அலங்காரம்.

அலங்காரப்படலம்.

* * * *

End :

ஈண்டுஞ் சிலீட்டமாலோசஞ்ச மதைசமாதிநன்கு
தூண்டுஞ்சுகுமாரதை யொடு காந்தியுதாரம்புலன்
மீண்டும்பொருட்டெளிவின்பம் பத்தாவியெனும்விதர்ப்பன்
வேண்டுங்கவுடன் விபரீதமாகவிளங்கிழையே.

(இதன் பொழிப்பு) சிலீட்டமும், ஆலோசமும், சமதையும், சமாதியும், சுகுமாரதையும், காந்தியும், உதாரதையும், புலனும், பொருட்டெளிவும், இன்பமும் என விவைபத்து முயிரென்று விதர்ப்பக்கவிகள் வேண்டுவர்; இவையிற்றை மாறுகவேண்டுவர் கவுடரென்னும் புலவர், எ-று.

* * * *

வீரசோழியம் முற்றிற்று.

5. இலக்கணவிளக்கம்—மூலமும் உரையும்.

Beginning :

பாயிரம்.

இந்திரதிருவி லியைந்தாங்கியைந்த
வந்தமி லிருமுது குரவரை
மைந்தரொடுபழிச்சுது மதிநலம்பெறவே. (1)

கவலைமற்றெவனோ வுலவையொன்றுடைமையிற்
பெண்ணொரு பாகனைப்பொரூஉ
மண்ணல்யானை யருள்வழிச்செலினே. (2)

அருந்திறன்முருக னஞ்செஞ்சீறடி
பொருந்தியவன்பொடு போற்றுதுந்
திருந்தியவிருந்தமிழ் தெருளுதற்பொருட்டே. (3)

தவளத்தாமரைத் தாதார்கோவி
லவளைப்போற்றுது மருந்தமிழ்குறித்தே. (4)

சந்தனப்பொதியத் தடவரைச்செந்தமிழ்ப்
பர(மாசாரியன்) பதங்கள்
சிரமேற்கொள்ளுதுந் திகழ்தரற்பொருட்டே. (5)

மன்னுதென்கயிலை வைத்தியநாதன்
பொன்னடிக் கமலப்போதினைச்
சென்னியிற்சேர்த்துது மதிசிறந்திடவே. (6)

திருவிளங்கிய மாநகரத்திற் குருவிளங்கியவாயின்மாடங்கள்போலவும், கற்றுவல்ல கணவற்குக் கற்புடையமனையாள்போலவும், தலையமைந்தயானைக்கு வினையமைந்தபாகன்போலவும், அளப்பரியவாகாயத்திற்கு விளக்கமாகிய திங்களுஞாயிறும்போலவும், நூற்கின்றியமையாச்சிறப்பிற்றாகலானுங்,—கொழுச்சென்றவழித் துன்னூசியினிதுசெல்லுமாறுபோலப், பருப்பொருட்டாகிய பாயிரங்கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூலினிது விளங்குமென்ப வாகலானும்,—அதுகேளாக்காற் குன்றுமுட்டிய குரீஇப்போலவுங், குறிச்சி புக்கமான்போலவும் மாணுக்கனிடர்ப்படுமாகலானும்,—"ஆயிரமுகத்தா னகன்றதாயினும், பாயிரமில்லது பனுவலன்றே" என்பவாகலானும்,—எந்நூலுரைப்பினுமந்நூற்குப்பாயிரமுரைத்துரைக்கவென்பது மரபு. அப்பாயிரம், பொதுவுஞ்சிறப்புமென விருவகைத்து. "பாயிரம் பொதுச்சிறப்பெனவிருபாற்றே" என்பவாகலின். "ஈவோன்றன்மை" முதலியன தன்னுலுரைக்கப்படுநூற்கே யுரியவன்றி, எல்லா நூன்முகத்து முரைக்கப்படுதலின் அவற்றை யுணர்த்தும் பாயிரம் பொதுவெனவும்;—"ஆக்கியோ

ன்பெயர்'' முதலியன தன்னூலுளைக்கப்படும் நூற்கேயுரியவாய் அவ்வொரு நூன்முகத்துரைக்கப்படுதலின் அவற்றையுணர்த்தும்பாயிரஞ் சிறப்பெனவுமாயிற்றென்க. அவற்றுள் **பொதுப்பாயிரம்,** ஈவோன்றன்மையு, மீதலியற்கையுங், கொள்வோன்றன்மையுங், கோடன்மரபுமெனநான்குவகைத்து: "ஈவோன்றன்மை யீதலியற்கை, கொள்வோன்றன்மைகோடன்மரபென, வீரிரண்டென்ப பொதுவின்றொகையே" என்பவாகலின். "நூலே நுவல்வோனுவலுந்திறனே, கொள்வோன் கோடற்கூற்றமைந்து, மெல்லாநூற்கு மிவைபொதுப்பாயிரம்" என்பதொருசூத்திரம்பற்றி யைந்தென்பாருமுளர். அஃதிலக்கணமன்று; அவயவமாகிய பாயிரத்துள் அவயவியாகிய நூல் அடங்காமையின். ''நூலினியல்பே நுவலினோரிரு, பாயிரந்தோற்றி'' என்பவாகலானும், 'நூன்முகம்' முதலிய குறிகளானும் அஃது அதற்கு அவயவமாதலறிக.

* * * *

அவருள்இப்பாயிரஞ்செய்தார் தன்மாணக்கராகிய தன்புதல்வர் **சதாசிவநாவலர்** எனவுணர்க. வரலாறு:—"கடல்வளைம்புடுத்த கண்ணகன்ஞாலத், தடரும்வல்லிருடுரந்தனைத்தையும்விளக்கும், பல்கதிர்ப்பருதியிற் பரம்பரனருளா, லுள்ளகத்திருள்கடிந் துறுபொருளெவற்றையும், பாற்படத்தொகுத்த பதினெண்மொழியுளு, மேற்கடல் கீழ்கடல் வேங்கடங்குமரி, யாகியவெல்லையு ளருந்தமிழ்ப்பௌவத், தெழுத்துமுதன் மூன்றையும் யாவருந்தெரியத், தொகைவகைவிரியிற் பகருகவென்று, வேதியர்திலகன் விரவலர்கோளரி, மாதையரதிபன் வரகுணமேரு, கல்விக்கெல்லை கருணைக்காகரம், **பெருமாண்**மெய்த்தவப் பேறெனத்தோன்றிய, திருமாலுலகஞ் செவ்விதிற்புரக்கு, மேதகுபுழ்த் திரு **வேங்கடநாத,** னேதினனுக வுவகைமீதூர, முன்னோர்நூலின் முடிபுநோக்கிச், சொல்லும்பொருளு மொல்வனதழீஇப், பல்சுவைக்கரும்பினொருவட்டேய்ப்ப, இலக்கணவிளக்கமென் றொருபெயர்நிறீஇப், புலப்படுத்தியலுறப் பொருள்விரித்துரைத்தனன், பவத்தொகையகற்றுந்தவத்தின் வரம்பானோன், பன்மீனுப்பட் பான்மதிபோல, வண்மீக நாதமாதவன் வரத்தா, வந்தணுநர்வந் தருள்செல்வன், வலம்புரியொருமுத்தன்ன, நலம்புரிவயித்தியநாததேசிகனே."

* * * * *

எழுத்ததிகாரம்.

எழுத்தியல்.

மலைமகளொருபான் மணந்துலகளித்த
தலைவனைவணங்கிச் சாற்றுவனெழுத்தே.

என்பது சூத்திரம்.

இவ்வதிகார மெழுத்துணர்த்தினமையா னெழுத்ததிகாரமென்னும்பெயர்த்து. எழுத்தையுணர்த்தியவதிகாரமென விரிக்க. எழுத்தென்றது அதனிலக்கணத்தை. அதிகாரமென்றது-முறைமை. இவ்வதிகாரத்துள் ஐவகையோத்தினு னெழுத்திலக்கணமுணர்த்துகின்ரு ரற்றுள் இம்முதலோத்து மொழியாக்கமும், மொழிகடம்மொடு முருபொவடும்புணர்வுழித்தோன் றுஞ்செய்கையும்போலன்றித் தனித்து மொழிப்படுத்துமெழுத்தின்கட் கிடப்பனவாகக் கூறுமெண் பெயர்முதலியபத்திலக்கணமு முணர்த்திற்ருகலான் எழுத்தியலென் னும்பெயர்த்து. இதனு ளித்தலைச்சூத்திரம் கூறத்தொடங்கியபொருள் இனிதுமுடியும் பொருட்டு வணக்கமும் அதனுன்முடிபெய்தும் பொருளுமுணர்த்துவதாகிய சிறப்புப்பாயிரங் கூறுகின்றது.

(இ-ள்.) மலையரசன் மகளாகிய வுமாதேவியைத் தனதொருகூற்றின்கண்ணேகலந்து உலகத்தைப்படைத்த விறைவனைத்தொழுது யான் கூறுவனெழுத்திலக்கிணத்தையென்றவாறு.

'மலை' என்பது மங்கலமொழியாகலின் முதற்கண் மங்கலங்கூறுதன்மரபென்று. மலையென்றும், இந்நூல்நின்றுநிலவுதல்வேண்டிமலைமகளொருபான் மணந்தென்றும், மலரோன் செயலுமிவன்செயலென்பா ருலகளித்தவென்றும், யாவர்க்கு முயர்ந்தோனென்பார் தலைவனென்றும், "மனமொழிமெய்களின் வணங்குதுமகிழ்ந்தே" என்பவாகலின் மனத்தாற்றணிவுதோன்ற நினைத்தலும் மொழியாற்பணிவுதோன்ற வாழ்த்தலும் தலையாற்றுணிவுதோன்றவிறைஞ்சலு மடங்கப்பொதுப்பட வணங்கியென்றும், அவ்வாறு வணங்கியோனல் யாதும்முடிபெய்தலிற் சாற்றுவனென்றும், ஆகுபெயரா னெழுத்திலக்கணத்தையெழுத்தென்றுங்கூறினர், மகளையென்னுமிரண்டனுருபு விகாரத்தாற்றொக்கது, சூத்திரமுஞ் செய்யுளாகலின். (1)

* * * * *

எழுத்ததிகாரம் முற்றும்.

சொல்லதிகாரம்.

பெயரியல்.

உமையவளொடுகலந் துலகுபுரந்தருளு
மிமையவனடிபணிந் தறைகுவன்சொல்லே.

என்பது சூத்திரம்.

இவ்வதிகாரமேற்பாயிரத்துள் "எழுத்துமுதன்மூன்றையும்" எனநிறுத்தமுறையானே, எழுத்துணர்த்திச் சொல்லுணர்த்துகின்ருராகலிற்சொல்லதிகாரமென்னும்பெயர்த்து; சொல்லையுணர்த்திய வதிகாரமென விரிக்க. சொல்லென்றது அதனிலக்கணம். அதிகாரமென்றது-முறைமை. சொல்லாவது ஒரெழுத்தானு மீரெழுத்தானுமிரண்டிற

ந்திசைக்கும் பலவெழுத்தானு மாக்கப்பட்டுப் 'பொருளையுந்தன்னையு மொருவனுணர்தற்குக் கருவியாமோசையாகலின் மேலதிகாரத்தோ டியைபுடைத்தாயிற்று. இவ்வதிகாரத்து ளைவகையோத்தினுற் சொல் லிலக்கணமுணர்த்துகின்முர்; அவற்று ளிம்முதலோத்துப் பெயர்ச்சொ ற்கள இயல்புணர்த்திற்ருகலாற்பெயரியலென்னும் பெயர்த்து. சிறுபா ன்மை யேனையிலக்கணங்களையுமுணர்த்திற்றேனும் பெயரியலென்றது பன்மைபற்றிய வழக்கு ; தலைமைபற்றியவழக்கெனினுமமையும். இத னுளித்தலைச்சூத்திரங் கூறத்தொடங்கியபொருள் இனிது முடியும்பொ ருட்டு வணக்கமு மதனுன்முடிபெய்தும் பொருளு முணத்துவதாகிய சிறப்புப்பாயிரங் கூறுகின்றது.

(இ-ள்.) உமாதேவியொடுபொருந்தி யுலகத்தைக்காத்து நிலைபெறச் செய்யுமிறைவனது தாளைவணங்கி யான்சொல்லுவன் சொல்லிலக்க ணத்தை யென்றவாறு.

மாயோன்செயலு மிவன்செயலென்பா ருலகுபுரந்தருளுமென்று ம், ஆகுபெயராற் சொல்லிலக்கணத்தைச் சொல்லென்றுங்கூறினுர். ஏனையவற்றிற்கும் ஏற்குமாறு 'மலைமகளொருபால்' என்னுஞ்சூத்திர த்திற்குரைத்தாங்குப் பொருள்விரித்துரைத்துக்கொள்க. (1)

* * * * *

சொல்லதிகாரம் முற்றும்.

பொருளதிகாரம்.

அகத்திணையியல்.

உமையுருவுருமடுத் துலகிளைப்பொழிக்கு
மிமையவனடிபணிந் தியம்புவன்பொருளே.

என்பது சூத்திரம்.

மேற்பாயிரத்துள் "எழுத்துமுதன் மூன்றையும்" என நிறுத்த முறை யானே எழுத்துஞ் சொல்லுமுணர்த்திப் பொருளுணர்த்துகின்முராக வின் இவ்வதிகாரம் பொருளதிகாரமென்னும் பெயர்த்து. பொருளை யுணர்த்திய வதிகாரமெனவிரிக்க. பொருளென்றது அதனிலக்கணம். அதிகாரமென்பது முறைமை. பொருளாவது மேலுணர்த்திபபோந்த சொற்ருெடர்கருவியாக வுணரப்படுவதாதலின் மேலதிகாரத்தோ டியைபுடைத்தாயிற்று. இவ்வதிகாரத்து ளைவகையோத்தினுற் பொரு ளிலக்கணமுணர்த்துகின்முர் அவற்று ளிம்முதலோத் தகத்திணையியல் புணர்த்திற்ருகலா னகத்திணையியலென்னும்பெயர்த்து.

அகமென்பதுஉள்ளம், திணையென்பது ஒழுக்கம், இயலென்றதுஇலக் கணம் எனவே அகத்திணையியலென்றது உள்ளத்தின்கண்ணே நிகழு மின்பமாகிய வொழுக்கத்திலக்கணமென்றவாமுயிற்றென்பது. இதனு ளிதத்லைச் சூத்திரங் கூறத்தொடங்கிய பொருள் இனிதுமுடியும்பொ

ருட்டு வணக்கமு மதனுன்முடிபெய்தும் பொருளுமுணர்த்துவதாகிய சிறப்புப்பாயிரங்கூறுகின்றது.

(இ-ள்.) உமாதேவியினது திருவுருவைத் தனது திருவுருவின்கண்ணேயடக்கி யுலகத்திலேப்பினேயாற்றும் இறைவனது தாளேவணங்கி யான்சொல்லுவன் பொருளிலக்கணத்தை யென்றவாறு.

ஈண்டு உலகமென்றது-உலகினேயும் உலகிலுள்ள சீவாத்மாக்களேயும். ஆகுபெயராற் பொருளென்றது இலக்கணத்தையுணர்த்துகின்றது. ஏனேயவற்றிற்கு மேற்குமாறு "மலேமகளொருபால்" என்னுஞ் சூத்திரத்திற்குரைத்தாங்குப் பொருள்விரித்துரைத்துக்கொள்க.

End:

போக்கறுமரபிற் பொருளெனப்படுவது
நோக்கரும்வீடு நுவற்சிசெல்லாமையி
னறம்பொருளின்ப மாகுமதுவே
யகனும்புறனு மென்ருயிருபாற்ருய்
வகைப்படவந்த வணிநலந்தழீஇச்
செய்யுளிடவயிற் புல்லியநெறித்தே.

இது மேற்கூறுவலென்றபொருளாவது விரித்துக்கூறு மூலகநடையானும் வேதநடையானு மித்துணேப்பகுதிப் படுமென்றும், அதுவே தொகுத்துக் கூறுந்தமிழ்நடையா னித்துணேப்பகுதிப்பட்டிவ்வாருகி யின்னுழிவிளங்குமியல்பிற்றெனவுங்கூறுகின்றது.

(இ-ள்.) குற்றமற்ற வியல்பினேயுடைய பொருளென்று சிறப்பித்துச்சொல்லப்படுவது மனத்தாலுக்குதற்கெட்டாத வீடு துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்ல திலக்கணவகையாற் கூறுதற்கெட்டாமையினதனேவிடுத்து விரித்துக்கூறு மூலகநடையானும் வேதநடையானு மறமும்பொருளுமின்பமுமென மூன்றுவகைப்படும். அங்ஙனம் விரித்துக்கூறப்படும்பொருளேதொகுத்துக்கூறுந் தமிழ்நடையான் அகப்பொருளும் புறப்பொருளுமென விரண்டுவகைத்தாய்க் குணமுமலங்காரமுமெனக் கூறப்படவந்த வணியானுளதாகிய சிறப்பினேப் பொருந்திச் செய்யுளிடத்தேசார்ந்து விளங்குமியல்பினே யுடைத்தாமென்றவாறு. **அறமாவது** - மனுமுதலிய நூல்களின் விதித்தனசெய்தலும் விலக்கியனவொழிதலுமாம். அது ஒழுக்கம், வழக்கு, தண்டமென மூன்றுவகைப்படும். அவற்றுள் **ஒழுக்கமாவது**-அந்தணர்முதலியவருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலேகளினின்று அவற்றிற்கோதிய வறங்களின் வழுவாதொழுகுதல். **வழக்காவது** - ஒருபொருளேத் தனித்தனியே யெனதெனதென்றிருப்பாரதுகாரணமாகத் தம்முண் மாறுபட்டப்பொருண்மேற்செல்வது. அது கடன்கோடன் முதலிய பதினெட்டுப்**பதார்த்தத்ததாம்** தண்டமாவது அவ்வொழுக்கநெறியினும் வழக்குநெறியினும் வழீஇனுளை அந்நெறி நிறுத்தற்பொருட்டொப்ப நாடியதற்குத்தகவொறுத்தல்.........

* * * * *

6. அகப்பொருள்விளக்கம் மூலமும் உரையும்.

சிறப்புப்பாயிரம்.

Beginning :

பூமலிநாவன் மாமலைச்சென்னி
யீண்டியவிமையோர் வேண்டலிற்போந்து
குடங்கையின்விந்த நெடுங்கிரிமிசைநீர்த்
தலைகடலடக்கி மலயத்திருந்த
விருந்தவன்றன்பா லியற்றமிழுணர்ந்த
புலவர்பன்னிருவருட் டலைவனாகிய
தொல்காப்பியனரு ளொல்காப்பெரும்பொரு
ளகப்பொருளிலக்கண மகப்படத்தழீஇ
யிகப்பருஞ்சான்றோ ரிலக்கியநோக்கித்
தொகுத்துமுறைநிறீஇச் சூத்திரம்வகுத்தாங்
ககப்பொருள்விளக்கமென் றதற்கொருநாமம்
புலப்படுத்திருளறப் பொருள்விரித்தெழுதினன்
மாந்தருந்தேவரும் வாழ்த்தமுக்குடைக்கீ
ழேந்தெழிலரிமா னேந்துபொன்னணைமிசை
மதிமூன்றுகவிப்ப வுதயமால்வரைக்
* கதிரோனிருந்தெனக் காண்டகவிருந்து
தத்துவம்பகர்ந்தோன் சரணம்பொருந்திய
வுத்தமன்புளிங்குடி யுய்யவந்தானெனு
முத்தமிழாசான் மைந்தனித்தலத்
திருபெருங்கலைக்கு மொருபெருங்குரிசில்
பாற்கடற் பல்புகழ்பரப்பிய
நாற்கவிராச நம்பியென்பவனே.

என்பது பாயிரம்.

எந்நூலுரைப்பினு மந்நூற்குப்பாயிரமுரைத்தே நூலுரைக்கப்படும். பாயிரம், (என்றும்), (முகவுரையென்றும்), அணிந்துரையென்றும், புறவுரையென்றும், தந்துரையென்று மொருபொருட்கிளவி. அப்பாயிரம் பொதுவுஞ் சிறப்புமென விருவகைய. அவற்றுள், பொதுப் பாயிரம் என்பது எல்லா நூன்முகத்துமின்றியமையாதது. என்னை: "ஈவோன்றன்மையீதலியற்கை, கொள்வோன்றன்மை கோடன்மர

---

* "கதிரொன்றிருந்தென" எனவும் பாடம்.

பென, வீரிரண்டாகும் பொதுவின் றொகையே" என்பவாகலின். சிறப்புப்பாயிரம் என்பது - எல்லா நூன்முகத்து மின்றியமையாதது; அது பலவகை. அவற்றுட் சிலவருமாறு:—"பன்னிய நூற்பெயர் பகர்ந்தோர்பெயர் காரணமுந், தன்னுபயனளவுஞ் சொல்லினுன்—முன்னைச், சிறப்பாமவற்றுட் சிலவேறினும், பெறப்படுமாமுன்னைப் பெயர்."

இவையெல்லாம் பாயிரத்தின் சூத்திரத்தினது பொருளுணாக்கவே விளங்கும்.

பூமிசைநடந்த வாமனைவாழ்த்தி
வடமலைச்சென்னி
யீண்டிக்கடவுளர் வேண்டலிற்போந்து
குடங்கையினலைகடலடக்கியீண்டிய
தென்மலையிருந்த விருந்தவனியற்றமிழ்
கெழீஇயவகப்பொரு டழீஇநோக்கி
வழிகொடுத்துநிறீஇ வகுத்துப்புலப்படுத்தாங்
கிகப்பிலகப்பொருள் விளக்கம் பகர்ந்தெழுதினன்
செந்தமிழ்நாட்டு மைந்தன்குரிசில்
பாற்கடற் பல்புகழ்பரப்பிய
நாற்கவிராச நம்பியென்பவனே.

பூமிசைநடந்த * * * நம்பியென்பவனே, என்பது—இந்திரனுனிருமிக்கப்பட்ட தெய்வத்தாமரையின்க ணெழுந்தருளிய வருகபரமன் சீர்பாதங்களைவாழ்த்தி வடமலையின்கணிருந்து வானோர்வேண்டலிற் றெற்கின்கண்போந்து கடன்முழுதங் குடங்கையினடக்கிப் பொதியமலையின்கணிருந்தவன் செய்த இயற்றமிழைப் பொருந்திய பெரும்பொருளின்கண் ணுண்டாகிய அகப்பொருடழுவுதலைநோக்கி யுலகத்தாரறியும்வகை வழிக்கொடுத்து முறையினிறுத்திக் கிளவிகளையடைவுபடவகுத்துப் புலப்படவிகப்பில் அகப்பொருள் விளக்கமென்னும் பெயர்கொடுத்து இந்நூல் பகர்ந்தெழுதினன், செந்தமிழ்நாட்டகத்து மைந்தனுகியகுரிசில் பாற்கடல்போலப் பலவகைப்பட்ட புகழைவிளக்கிய நாற்கவிராசனெனுஞ்சிறப்புப்பெயரையுடைய நம்பியென்னுமியற்பெயரையுடையோன், எ-று.

* * * * *

நாற்கவியாவன—ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்பனவாம். 'பாற்கடற்பல்புகழ்பரப்பி' என்புழிஉவமந்தொக்கது. 'நம்பி' என்னுமியற்பெயர் 'எழுதினன்' என்னுமுற்றுவினைப்பயனிலைகொண்டது. ஆக்கியோன்பெயர் - நம்பியென்பது. வழி - தொல்காப்பியத்தின் வழி; அதன் வழியதாயினுந் தொல்காப்பிய முதனூலன்மையினிது சார்புநூலாம். எல்லையுமதனேயடங்கும். நூற்பேர் - அகப்பொருள்விளக்கமென்பது. யாப்பு - தொகுத்தியாத்தலென்பது. நுத

லியபொருள் - அகப்பொருளென்பது. **கேட்போர்** - கற்றுவல்லோர். **பயன்** - வீடுபேறு. **காலம் - குலசேகரபாண்டியன்காலம். களன்** - அறிவோரவைக்களம். **காரணம்** - களவிகளையடைவுபடக்கோத்தலெ ன்பது.

இவையெல்லாம் பாயிரத்தினிலக்கணமெனக்கொள்க.

சிறப்புப்பாயிரம் முற்றும்.

1 - வது.—அகத்திணையியல்.

மலர்தலையுலகத்துப் புலவோராய்ந்த
வருந்தமிழகப்பொருள் கைக்கிளையைந்திணை
பெருந்திணையெனவெழு பெற்றித்தாகும்.

என்பது சூத்திரமென்னுதலிற்றோவெனின், மேற்பாயிரத்திலக்க ணமுணர்த்திப்போந்தாம்; இனி நூலிலக்கணமுரைக்கின்றும். அஃ துரைக்குங்கால் நூனுதலிய துரைத்தலும், நூலு ளதிகாரநுதலிய துரைத்தலும், அதிகாரத்து ளோத்துநுதலிய துரைத்தலும், அவ்வோ த்தினுட் சூத்திரநுதலியதுரைத்தலும் என நான்குவகையானுரைத் தல்வேண்டும்.

*　　*　　*　　*　　*

2 - வது.—களவியல்.

உளமலிகாதற் களவெனப்படுவ
தொருநான்குவேதத் திருநான்குமன்றலுள்
யாழோர்கூட்டத் தியல்பினதென்ப.

என்...னின்—இவ்வோத்தென்னபெயர்த்தோவெனின், களவுணர் த்தலிற்களவியலென்னும் பெயர்த்து. இவ்வோத்தினு ளித்தலைச்சூத் திரமென்னுதலிற்றோவெனின், களவுகற்பென்னுங் கைகோளிரண்டி னுள்ளுங் களவென்னுங் கைகோளதிலக்கணமுணர் - ற் று.

உளமலிதற்குக் காரணமாகிய வனப்பினையுடைய களவென்று சொ ல்லப்படுவது நான்காகிய வேதத்துட்சொல்லப்பட்ட எட்டாகிய மண த்துட் காந்தருவமணத்தோடொத்த இயல்பினையுடைத்தென்று சொ ல்லுவர் புலவர், எ - று.

"இன்பமும் பொருளுமறமுமென்றாங், கன்பொடு புணர்ந்த வைந் திணமருங்கிற், காமக்கூட்டங்காணுங்காலை, மறையோர்தேஎத்துமன் றலெட்டினுள், துறையமை நல்யாழ்த்துணைமையோரியல்பே" என்றாரா கலின். **வேதநான்காவன** - இருக்குமுதலாயின. **மன்றலெட்டாவன** - பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் எனவிவை.

3 - வது.—வரைவியல்.

அஃதாவது - எவ்விதத்தானும் வரைந்தொழுகுவது; அஃதிருவகைப்படும். என்னை :

வரைவெனப்படுவ துரவோன்கிழத்தியைக்
குரவர்முதலோர் கொடுப்பவுங்கொடாமையுங்
கரணமொடுபுணரக் கடியயர்ந்துகொளலே.

அவைதாம், இருவகையாகி நான்குவகைப்படும். என்னை : "வரைவுநிலையே யறத்தொடுநிலையென், றுரையிரண்டும்வரைவிற்குரிய, கிளவித்தொகையெனக் கிளந்தனர்புலவர்" இது தொகை. "வரைவு முயலவுணர்த்தல் வரைவெதிர்வுணர்த்தல், வரைவறிந்து மகிழ்தல் பரவல்கண்டுவத்த லென், றொருநால்வகைத்தே வரைவுமலிதல்.'' இது வகை. "வரைவியன்மலிதலுமறத்தொடு நிற்றலு, முரையுடன் போக்குஞ்.................

*　　*　　*　　*　　*

4 - வது.—கற்பியல்.

பொற்பமைசிறப்பிற் கற்பெனப்படுவது
மகிழ்வுமூடலு மூடலுணர்த்தலும்
பிரிவும்பிறவும் மருவியதாகும்.

இவ்வோத் தென்னபெயர்த்தோவெனின், கற்பிலக்கணமுணர்த்தலாற் கற்பியலென்னும் பெயர்த்து.

பொலிவமைந்த சிறப்பினையுடைய கற்பென்று சொல்லப்படுவது உள்ளமகிழ்ச்சியுமூடலு மூடலுணர்த்தலும் பிரிவும்பிறவும் பொருந்தியதாகும், எ - று.—பிறவுமென்றதனாற் பிரிந்துழிவரும் விகற்பமெல்லாங்கொள்ளப்படும்.

*　　*　　*　　*　　*

5 - வது.—ஒழிபியல்.

ஒழிபெனப்படுவ தகப்பாட்டுறுப்பும்
வழுவுமமைதியுந் தழுவியதாகும்.

இவ்வோத்தொழிபியலென்னும்பெயர்த்து. ஒழிபென்றுசொல்லப்படுவதுஅகப்பாட்டுக்குரியவுறுப்பும், அகப்பாட்டிலக்கணத்தைத்தப்பியுமைந்திணையும் பொருந்தியதாமென்றவாறு.

*　　*　　*　　*　　*

End :

கூறியவல்ல வேறுபிறதோன்றினுங்
கூறியவற்றொடு கூட்டிக்குறிக்கொளக்
கூறியுணர்த்தல் குணத்தோர்க்கியல்பே.

இதன்பொருள். வேறேதோன்றினவாயினும் ஒன்றை இதனுளெ டுத்தோதப்பட்ட பொருள்களோடுங்கூட்டி யுண்மைப்படச்சொல்லிப் பிறர்க்குணர்த்துதல் குணமுடையோர்க்கியல்பாம், எ - று.

ஒழிபியல் முற்றும்.

அகப்பொருள்விளக்கம் மூலமும் உரையும் முற்றுப்பெற்றது.

---

7. யாப்பருங்கலக்காரிகை மூலமும் உரையும்.

1 - வது.—உறுப்பியல்.

Beginning :

எண்ணியவெண்ணியவெய்துப
கண்ணுதற்பவளமால்வரைபயந்த
கவளயானையின் கழல்பணிவோர்க்கே.
நற்குஞ்சரக்கன்று நண்ணிற்கலைஞானங்
கற்குஞ்சரக்கன்றுகாண்.

கந்தமடிவில்கடிமலர்ப்பிண்டிக் கண்ணார்நிழற்கீ
ழெந்தமடிகளிணையடியேத்தி யெழுத்தசைசீர்
பந்தமடிதொடை பாவினங்கூறுவன்பல்லவத்தின்
சந்தமடிய வடியான்மருட்டியதாழ்குழலே.

என்பது காரிகை. நூலுரைக்கும்பொழுது நூற்பெயருங் காரணமு மாக்கியோன்பெயரு மளவும் பயனுமெடுத்துரைக்கற்பாற்று. இந்நூ லென்ன பெயர்த்தோ வெனின், பாளித்தியமென்னும் பாகதவிலக் கணமும் பிங்கலமென்னும் சந்தோபிசிதியும் போலவே காரிகையாப் பிற்றாய், துணகாங்கிய மென்னுங் கருநாடகச்சந்தமேபோல மகடூஉமு ன்னிலையை யுடைத்தா யவையடக்கமுடைத்தாய், மயேசுவரர்யாப்பே போல வுதாரணமெடுத்தோதி, இசைத்தமிட்செய்யுட்டுறைக்கோவை யேபோலவு மருமறையகத் தட்டகவோத்தின்வருக்கக்கோவையே போலவு முருபாவலங்காரத்துக்கு நீதகச்சுலோகமேபோலவும் முத னிலைப்புணர்த்திய விலக்கியத்ததாய், வேதத்திற்கு நிருத்தமும் வியாக ரணத்துக்குக் காரிகையும் அவிநயர்யாப்பிற்கு நாலடிநாற்பதும்போல வே யாப்பருங்கலமென்னும் யாப்பிற் கங்கமா யலங்காரமுடைத்தா ய்ச் செய்யப்பட்டமையால் யாப்பருங்கலக்காரிகையென்னும் பெயர் த்து. இந்நூல் யாதுகாரணமாகச் செய்யப்பட்டதோவெனின், பண் டையோருரைத்த தண்டமிழ்யாப்பிற் கொண்டிலாத குறியினோைக் குறிக்கொளுவுதல் காரணமாகவும், தொல்லைப்பனுவற்றுணிபொரு ளுணர்ந்த நல்லவையோரை நகுவிப்பது காரணமாகவுஞ் செய்யப்ப

ட்டது. இந்நூல் யாரால் செய்யப்பட்டதோவெனின், ஆரியமென்னும் பாரிநம்பவ்வத்தைக் காரிகையாக்கித் தமிழ்ப்படுத்த வருந்தவத்துப் பெருந்தன்மை அமுதசாகரனென்னுமாசிரியரால் செய்யப்பட்டது.

*   *   *   *   *

தேனார்கமழ்தொங்கன்மீனவன்கேட்பத்தெண்ணீரருவிக்
கானார்மலயத்தருந்தவன்சொன்னகன்னித்தமிழ்நூல்
யானுநடாத்துகின்றேனென்றெனக்கேநகைதருமா
லானுவறிவினவர்கட்கென்னுங்கொலென்னுதரவே.

இக்காரிகை நூலினது பெருந்தன்மையு மாசாரியரது பெருந்தன்மையுந் தனதுள்ளக்குறையு முணர்த்தியமுகத்தா னவையடக்க முணர்த்துதனுதலிற்று. (2)

சுருக்கமில்கேள்வித் துகடீர்புலவர்முன் யான்மொழிந்த
பருப்பொருடானும் விழுப்பொருளாம் பனிமாலிமயப்
பொருப்பகஞ்சேர்ந்த பொல்லாக் கருங்காக்கையும்பொன்னிறமா
யிருக்குமென்றிவ்வாறுணர்க்குமன்றேவிவ்விருநிலமே.

இக்காரிகை புலவரது சிறப்புணர்த்திய முகத்தா னவையடக்கமுணர்த்துதனுதலிற்று. (3)

*   *   *   *   *

2 - வது.—செய்யுளியல்.

வெண்பாவகவல் கலிப்பாவளவடிவஞ்சியென்று
மொண்பாவடிகுறள் சிந்தென்றுரைப்ப வொலிமுறையே
இண்பாமலிசெப்பல் சீர்சாலகவல் சென்றேங்குதுள்ள
லண்பாவமைந்த நலமிகுதூங்கனறுநுதவே.

*   *   *   *   *

தென்றலிடையுந் திருநுதல்வேர்வரும் பன்முறையென்
றொன்றியபாவும்பலயாவையுமென்பவொண்போதமைந்த
பொன்றிகழாதி புறநிலைகைக்கிளைவாயுறைவாழ்த்
தென்றிவற்றிற்குஞ் செவியறிவிற்குமிலக்கியமே.

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின்வழியே மருட்பா நான்கிற்குங் காட்டிய விலக்கியங்களை முதனினைத்துக்கொள்க.

"வேதமாய்மேன்மகனும் வேந்தன்மடமகளு
நீதியாற்சேர்ந்து நிகழ்ந்தநெடுங்குளம்போ
லாதிசால்பாவு மரசர்வியன்பாவு
மோதியவாறேத மருட்பாவாயோங்கிற்றே."

"பண்ணுந்திறமும்போற்பாவுமினமுமாய்
வண்ணவிகற்பவகையினுல் - பண்ணின்
றிறம்விளரிக்கில்லதுபோற்செப்பலகவ
லிசைமருட்குமில்லையினம்."

இவையிற்றை விரித்துரைத்துக்கொள்க.

3-வது.—ஒழிபியல்.

சீருந்தளையுஞ் சிதையிற்சிறிய இஉவளபோ
டாருமறிவ ரலகுபெறுமையைகாரநைவே
லோருங்குறிலிய லொற்றளபாய்விடி ஞேரலகாம்
வாரும்வடமுந் திகழுமுகிண்முலை வாணுதலே.

* * * * *

End:

வெள்ளெயிற்றுப்பேழ்வாய் ஞமலிக்குமான்குழா
மெள்ளியிரிவனபோன் றெவ்வழியும் - வள்ளற்கு
மாலார்கடல்போன் மணம்பரந்தவாட்டானே
மேலாருண்மேலோர் மெலிந்து.

இதனுட் பாட்டுடைத்தலைவனை நாயோடுவமித்துச் சொன்னமை யால் ஆனந்தவுவமையென்னும் அலங்காரக்குற்றமாயிற்று: என்னை: "இறப்பவுயரினு மிறப்பவிழியினு மறத்தகைவழிய வானந்தவுவமை" என்றாராகலின். பிறவுமன்ன.

இனியெல்லாக்குற்றமுந் தீர்ந்த செய்யுள்வருமாறு:—"தாமரை புரையுங் காமர்சேவடி, பவழத்தன்னமேனித்திகழொளிக், குன்றியேய்க்கு முடுக்கைக்குன்றி, னெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர்நெடுவேற், சேவலங்கொடியோன்காப்ப, வேமவைகலெய்தினுலகே" எனவரும்.

ஒழிபியலோத்து முற்றும்.

உறுப்பியல்காரிகை, 20; செய்யுளியல்காரிகை, 15; ஒழிபியல்காரிகை, 9; ஆகவியல் 3-க்குக் காரிகை 44.

யாப்பருங்கலக்காரிகை முற்றும்.

யாப்பருங்கலக்காரிகையுரையில்

விளங்கியமேற்கோள் (இலக்கியம்.)

1. அகரமுதலவெழுத் ... திருக்குறள்.
2. அங்கண்விசும்பின் ... நாலடியார்.
3. அமிழ்தினுமாற்றவினிதே ... திருக்குறள்.
4. அரிதாயவறனெய்தி ... கலித்தொகை.
5. அருளல்லதியாதெனிற் ... திருக்குறள்.
6. அலைப்பான்பிறிதுயிரை ... நான்மணிக்கடிகை.
7. அறத்தாறிதுவென ... திருக்குறள்
8. அறிவினானாகுவதுண்டோ ... ஷை
9. அன்பீனுமார்வ ... ... ஷை
10. ஆத்தவறிவினர் ... ... நாலடியார்.
11. ஆர்கலியுலகத்து ... ... முதுமொழிக்காஞ்சி.
12. ஆவேறுருவின ... ... நாலடியார்.
13. இடம்படமெய்ஞ்ஞானங் ... ஷை
14. இருங்கடலுடுத்த ... ... புறம்.
15. இருதுவேறுமை ... ... சூளாமணி.
16. இறைக்குமஞ்சிறை ... • ... ஷை
17. இன்றுகொலன்றுகொல் ... நாலடியார்.
18. இன்னாமைவேண்டின் ... நான்மணிக்கடிகை.
19. ஈத்துவக்குமின்பம் ... திருக்குறள்.
20. உடையார்முன் ... ... ஷை
21. உண்ணாமையுள்ள ... ... ஷை
22. உண்ணாஞெளிநிருன் ... நாலடியார்.
23. உருவுகண்டெள்ளாமை ... திருக்குறள்.
24. எல்லா விளக்கும் ... ... ஷை
25 எறும்பியளையுட் ... ... குறுந்தொகை.
26. கடற்குட்டம் ... ... நானமணிக்கடிகை.
27. கணிகொண்டலர்ந்த ... சூளாமணி.
28. கருமமுமுள்படாப் ... ... நாலடியார்.
29. கன்றுகுணில்லாக் ... ... சிலப்பதிகாரம்.
30. காமர்கடும்புனல் ... ... கலித்தொகை.
31. காய்மாண்ட ... ... சிந்தாமணி.
32. குழலினிதியாழினி ... ... திருக்குறள்.
33. குன்றக்குறவன் ... ... ஐங்குறுநூறு.
34. கொல்வான்புலாலை ... ... திருக்குறள்.
35. கொன்றைவேய்ந்த ... ... கொன்றைவேய்ந்தன்.
36. கோழியெறிந்த ... ... பட்டினப்பாலை.
37. சிறியகட்பெறினே ... ... புறம்.
38. சுடர்த்தொடீகேளாய் ... கலித்தொகை.
39. செங்களம்படக் ... ... குறுந்தொகை.
40. செய்யவாய்ப்பசும் ... ... சூளாமணி.
41. தக்கார்தகவிலர் ... ... திருக்குறள்.
42. தாமரைபுரையுங் ... ... குறுந்தொகை.
43. திருநுதல் ... ... வெண்பாமாலை.
44. திரைத்தசாலிகை ... ... சூளாமணி.
45. துகடீர்பெருஞ்செல்வம் ... நாலடியார்.
46. தேம்பழுத்தினிய ... ... சூளாமணி.

47. நன்றறிவாரிற் ... ... திருக்குறள்.
48. நிலத்தினும்பெரிதே ... குறுந்தொகை.
49. பற்றுகபற்றற்றான் ... ... திருக்குறள்.
50. பாயிருள்பரப்பகம் ... ... மார்க்கண்டேயனார்காஞ்சி.
51. பாலொடுதேன்கலந் ... திருக்குறள்.
52. பொய்மையும் ... ... ஷை
53. மங்கலமென்ப ... ... ஷை
54. மலர்மிசையேகினான் ... ஷை
55. மழையின்றி ... ... நான்மணிக்கடிகை.
56. மாக்கொடி ... ... சூளாமணி.
57. முதுக்குறைந்தனளே ... ஐங்குறுநூறு.
58. மூவடிவினாவிரண்டு ... சூளாமணி.
59. யாதானுநாடாமா ... ... திருக்குறள்.
60. வளம்படவேண்டாதார் ... நாலடியார்.
61. வளர்கொடியன ... ... சூளாமணி.
62. வேரல்வேலி ... ... ஷை
63. வென்றான்வினையின் ... ஷை
64. வேய்தலைநீடிய ... ... ஷை
65. வைகலும்வைகல் ... ... நாலடியார்.

1.	ஐங்குறுநூறு	2
2.	கலித்தொகை	3
3.	குறுந்தொகை	4
4.	கொன்றைவேய்ந்தன்	1
5.	சிந்தாமணி	1
6.	சிலப்பதிகாரம்	1
7.	சூளாமணி	12
8.	திருக்குறள்	21
9.	நாலடியார்	10
10.	நான்மணிக்கடிகை	4
11.	பட்டினப்பாலை	1
12.	புறம்	2
13.	மார்க்கண்டேயனார்காஞ்சி	1
14.	முதுமொழிக்காஞ்சி	1
15.	வெண்பாமாலை	1

விளங்காமேற்கோள் (இலக்கியம்.)

1. அஅவனும் வெ.
2. அகலிருவிசும்பின் ஆ.
3. அங்கண்மதியமரவின் வாய்ப் ஆ.
4. அங்கண்வானத் வ.
5. அடல்வேலமர்நோக்கி வெ.
6. ஆடையார்பூங் வெ.
7. அணிகிளர் சிறுபொறி க.
8. அணிநிழலசோகமர்ந் ஆ.
9. அணிநிழலசோகின்ற ளிர் ஆ.
10. அந்தரத்துள்ளே வெ.
11. அம்மபவள்வரிநெடுங் கண் வெ.
12. அரியவணாகீண்டு வெ.
13. அவரே ஆ.

14. அவாப்போலகன்றிதன் வெ.
15. அள்ளற்பள்ளத்தகன்.
16. அறிந்தானையேத்தி வெ.
17. அறுவர்க்கறுவரா.
18. அன்னையறங்கொல் வெ.
19. அன்னையை வெ.
20. ஆஅவளியவலவன்றன் வெ.
21. ஆகநகண்டக விரு.
22. ஆரியமன்னர் வெ.
23. ஆலத்துமேல வெ.
24. ஆவாவென்றே விரு.
25. ஆழியிழைப்பப் வெ.
26. இடங்கைவெஞ்சிலை விரு.
27. இடைநுடங்க வெ.
28. இந்திரனேபோலு வெ.
29. இரங்குகுயின்முழுவா ஆ-து.
30. இருகோட்டொருமதி.
31. இருள்பாரந்தன்ன.
32. இனமலர்க்கோதாய் வெ.
33. இன்னகைத்துவர்வாய் ஆ.
34. உமணர்சேர்ந்து ஆ.
35. உதக்காண் வெ.
36. உரிமையின்கணின்மை யாற் விரு.
37. உலகினுள் க.
38. உலகுடன்விளக்கு ஆ.
39. உவகை வ.
40. உள்ளார்கொல்லோ ஆ.
41. எஃகிலங்கிய வெ.
42. என்னிற்பொலிந்த வெ.
43. ஏஎர்சிதையவழாஅ வெ.
44. ஏடியறங்கொல் வெ.
45. ஏர்மலர்நறுங்கோதை வெ.
46. ஒக்குமேயொக்குமே வெ.
47. ஒருமால்வரை க-து.
48. கடியார்பூங்கோதை வெ.
49. கண்கருவிளை வெ.
50. கண்டனனெனக்.
51. கயலேருண்கண் ஆ.
52. கயன்மலைப்பன்ன.
53. கலங்கழாலித்துறை வ.
54. காதுசேர்தாழ் வெ.
55. கார்நறுநிலங்.
56. காவியங்கருங்கட்.
57. குடநிலைத்தண்புறவிற்.
58. குருகுவெண்டாளி ஆ.
59. குழவிசையவண் வெ-து.
60. குறுத்தாட்பூதம் ஆ.
61. கூற்றுவனைவின்மதனை விரு.
62. கெடலருமாமுனிவர்.
63. கொங்குதங்குகோதை விரு.
64. கொடிகுவளை.
65. கொடிவாலன.
66. கொண்டன்முழங்கினவால்.
67. கொண்டையையவென்ற வெ.
68. கொய்தினைகாத்தும்.
69. கொன்றூர்ந்தமைந்த ஆ-து.
70. கொன்றகோடுநீடு வ.
71. கோழியுங்கூவின விரு.
72. சாரல்வாங்கிய.
73. சிலைவிலங்குநீள்புருவம் வெ.
74. சிறடிப்பேரக ஆ.
75. சுரமறிவனதுறை.
76. சுனையாழவம்மி வெ.
77. சுற்றுநீர்சூழ்கிடங்கிற் வ.
78. சூரல்பம்பிய வ.
79. செங்கண்மேதி.
80. செல்வப்போர்க்கதக்கண் ணன் க.
81. செறிதொடியுவகை.
82. சேற்றுக்கானீலஞ்.
83. சொல்லினீரிவராசை க-கலி.
84. சோலையார்ந்தசுரத்திடை.
85. தடமண்டுதாமரையின் வெ.
86. தண்டையினக்கிளி ஆ.
87. தண்மதியோர்முகத்தாளை.
88. தந்தையிலைச்சுமடன்.
89. தாஅட்டாஅமரை.
90. தாமரையின்றொடித் வெ.
91. தாழ்ந்தவுணர்வின ராய் விரு.
92. தாளாளரல்லாதார் வெ-து.
93. திருமறைதலைஇய ஆ.
94. திறந்திடுமின் வெ.
95. துணியிரும்பௌவம்.
96. துவைக்குந்துளி
97. துளியொடுமயங்கிய ஆ.
98. தெங்கங்காய்போலத் வெ.
99. தென்பாண்டிகுட்டம் வெ.
100. தென்றலிடைபோழ்ந்து.
101. தேரோடத்துகள்கெழு மின வ.
102. தேன்றூட்டுங்கரும்பின்.
103. தொன்னலத்தின்புலம்.
104. தோடாரெல்வளை. ஆ.
105. நடைக்குதிரையேறி.
106. நண்ணுவார்வினை.
107. நண்பதென்று வெ-தா.
108. நலங்கிளர்திருமணியும்.
109. நறுநிலநெய்தலும் வெ.

110. நற்கொற்றவாயில் வெ
111. நீடிணர்க்கொம்பர்க்.
112. நீரின்றண்மையும்.
113. நீலமாகடல்.
114. நீலுண்டுகிலிகை.
115. நெடுவரைச்சாரற்.
116. பகலே, பல்பூங்கானற் ஆ.
117. படையொடுபோகாது.
118. பண்டுமொருகாற்.
119. பருஉத்தடக்கை.
120. பலமுறையுமோம்பப்.
121. பல்யானைமன்னர்.
122. பல்லுக்குத்தோற்ற.
123. பவழமுமுத்தங் வெ.
124. பற்றிப்பலகாலும் வெ.
125. பன்மாடக்கூடன்மதுரா.
126. பாசிலைழயாகம் வெ.
127. பாடுநர்க்குமாடுநர்க்கும் வெ.
128. பார்க்கடன்முகந்த.
129. பாவாயறங்கொல் வெ.
130. பிண்டியினீழற்.
131. புன்காற்புணர்மருதின்.
132. பூண்டபறையறைய.
133. பூத்தவேங்கை. ஆ.
134. பூந்தண்சினைமலர்.
135. பூந்தாட்புறவின் வெ.
136. பூந்தாட்புனற்றாமரை.
137. பூந்தாமரைப்போதலமர வ.
138. பொன்மலிகச்சி
139. பொன்னாரமார்பிற் வெ.
140. பொன்னினன்ன ஆ.
141. போதசாந்தம் ஆ.
142. போதவிரிகுறிஞ்சி.
143. போந்துபோந்து.
144. மஞ்சுசூழ்சோலை வெ.
145. மடப்பிடியைமதவேழம்.
146 மண்டலம்பண் க-து.
147. மண்டிணிந்தநிலனும்.
148. மணிகிளர்நெடுமுடி.
149. மதிக்குநேர் க-கலி.
150. மந்தரநிலம்வந்தசைப்ப வ.
151. மனையிதழ்புனையு.
152. மலிதேரான்
153. மன்றலங்கொன்றை வெ.
154. மாவழங்கலின் வ.
155 மாவாழ்புலிவாழ் கட்-கலி.
156. மாவும்புள்ளும் ஆ.
157. மீன்றேர்ந்தருந்திய.
158. முருகவிழ்தாமரை.
159. முல்லைமுறுவலித்து வெ.
160. முழங்குதிசைக் வெ-து.
161. மைசிறந்தனமணிவரை.
162. மொய்த்துடன்றவழு வ.
163. யானுந்தோழியு.
164. யானையெருத்தத் வெ.
165. வஞ்சியேயென்றவன்றன் வெ.
166. வடியேர்கண்ணீர் வெ.
167. வடிவுடைநெடுமுடி.
168. வண்டார்பூங்கோதை.
169. வண்டுறைபூந்தார் ஆ-து.
170. வந்துநீசேரி வெ.
171 வள்ளெயிற்றுப் வெ.
172. வாணெடுங்கண்.
173. வார்காற்செங்கழுநீர்.
174. வாளார்ந்தமைந்த வெ-க.
175. வாள்வரிவேங்கை.
176. வானுறநிமிர்ந்தனை ஆ-தா.
177. வானோர்தொழவண்டாமரை.
178. விடஞ்சூழரவின் விரு.
179. விளங்குமணிப்.
180. வினைத்திண்பகை.
181 வெண்டிங்கள் வெ.
182. வெண்மணல் வெ.
183. வெறிகமழ்தண்புறவின் வெ.
184. வெறியறுகமழ் கண்ணி வெண்டுறை.
185. வேதினவெரிதி ஆ.
186 வையகமெல்லாங்.

யாப்பிற்கு மேற்கோளாக எடுத்த ஆசிரியர்களும் நூல்களும்.

1. அவிநயனார்.
2. காக்கைபாடினியார்.
3. கையனார்.
4. செய்யுளியலுடையார்.
5. தொல்காப்பியனார்.
6. நத்தத்தனார்.
7. பல்காயனார்.
8. பாடலனார்.
9. மயேச்சுரர்.
10. யாப்பருங்கலம்.

விளக்கமேற்கோள் (இலக்கணம்.)

1. அ இ உ எ ஒ இவைகுறிய.
2. அ இ உ எ ஒ வென்னும்.
3. அஃகேனமாய்தந்.
4. அகர முதல ஔகாரவிறு
வாய்.
5. அகரமோடாசாரம்.
6. அகலமென்பதாசறக்.
7. அகவவென்ப.
8. அடிமுதற்பொருள்.
9. அம்மையழகு
10. அருணைக்குநீரார்.
11. அளபெடைதனியிரண்.
12 அளபேபுலுதம்.
13. அளவடிமுதலா.
14. அனையவாகிய.
15. ஆசிரியப்பாவின்.
16. இயற்சீரெல்லா.
17. இயற்சொற்றனே.
18. இயற்பெயர்சார்த்தி.
19. இயற்பெயர்மருங்கின்.
20. இரண்டடியெதுகை.
21. இறப்பவிழிந்கதும்.
22. ஈரசைகூடியசீர்.
23 ஈரடியிரண்டும்.
24. ஈரெழுத்தொருமொழி.
25. உயிரளபெடையு.
26. உயிரீராறே.
27. உயிர்மெய்க்களவு.
28. உரைக்கப்படும்பொருட்.
29. உவமைக்குவமை.
30. எழுசப்படுசவி.
31. எழுத்தல்லிசையை.
32. எழுத்துநிலைதிரிந்த.
33. ஏந்திசைத்துள்ளல.
34. ஒத்தவடித்தாய்.
35. ஒற்றொடுபுணர்ந்த.
36. ஒன்றல்லவைபல.
37. ஒன்றியவஞ்சித்.
38. ஒன்றிரண்டொருமூன்.
39. ஓதப்பட்டவுறுப்புவகை.
40. ககரமுதனகரவிறு.
41. கலிநிலைவகையும்.
42. கலியொடுவெண்பா.
43. காட்சிமுதலா.
44. குருசீர்மிசைவரத்.
45 குறளடிநான்மையிற்.
46. குறிலேகுறிலிணை.
47. குறுமையெழுத்தன்.
48. குற்றிகரங்குற்றுகரம்.
49. குற்றியலிகர.
50. குன்றுகூதிர்பண்புகோழி.
51 கூறியதகூறினுங்.
52. கூறியவுறுப்பின.
53 ஙஞணநமனவயலள.
54. சின்மென்மொழிப்பின்.
55. சீர்முழுதொன்றற்.
56. செயிர்தீரசெய்யுள்.
57 செய்யுண்மொழியாற்.
58. ஞகரமுதலா.
59 தந்துபுன்னிற்றலிற்.
60. தரவுதாழிசை.
61. தரவேத்ரவிணை.
62. தனிச்சொற்றழுவல்.
63. தனிநிலைமுதனிலை.
64. தனிநிலையொற்றிவை.
65. தூங்கேர்தடுக்கல்.
66. தெரிந்தமொழியால்.
67. தேற்றம்வினாவே.
68. நாற்சீர்கொண்ட.
69. நிரைநடுவில்லா
70. நெடிலேகுறிலிணை.
71. நெடில்குறில்தனியாய்.
72. நேரிசைச்சிந்தும்.
73. நேர்நேரியாநிலை
74. பகுத்தெதிர்நிற்றலிற்.
75. டண்ணஞ்.
76 பொழிப்பெனப்படுவது.
77. மன்றவாணன்.
78. மாச்சீர்முன்வரும்.
79. மாத்திரைவகையால்.
80. முதற்சீர்நான்கும்.
81. மெய்யுடம்புறப்போற்.
82. மொழிமுதலிடைகடை.
83. மொழியினும்.
84. யரலழவென்னும்.
85. யாப்பும்பாட்டுந்.
86. வணக்கமதிகாரம்.
87. வருக்கநெடிலினம்.
88. வல்லெழுத்தாறே.
89 வழிபடுதெய்வவணக்கஞ்.
90. விதப்புக்கிளவி.
91. வெண்சீர்வெண்டளை.
92. வெள்ளைமுதலா.
93 வெள்ளையுடபிறதளை.
94. வேதவாய்.

8. சேந்தன் திவாகரம்.

1 - வது.—தெய்வப்பெயர்த்தொகுதி.

Beginning :

தந்திமுகத்தெந்தை சதங்கைப்பதம்போற்றிச்
சிந்தைவிளக்காந் திவாகரத்துள்—வந்த
தொகுதியொரு பன்னிரண்டுஞ் சோராமனேரோ
பகுதியுறமனமேபற்று.

[சிவன்பெயர்.]

சங்கரனிறையோன் காமதகனன்
கங்காதரனே கறைமிடற்றண்ணல்
கூற்றையுதைத்தோன் குன்றவில்லி
ஏற்றுவாகனன் திரியம்பகன்சோதி
நக்கன்சடையோன் நாரிபாகன்
முக்கட்பகவன் பசுபதிபரமன்
கொன்றைசூடி கொலைமழுவாளி
ஈமத்தாடி பிஞ்சகன்பித்தன்
ஆனையுரித்தோ னரன்சிவனுருத்திரன்
காலகாலன் கபாலமூர்த்தி
நீலகண்டன் நீறணிகடவுள்
அரவாபரணன் ஆரழலாடி
பிறையதுசூடி பெருமானுமாபதி
அழலதுவேந்தி யமலனனந்தன்
பரசுபாணி சுடலையாடி
மானிடமேந்தி மறைமுதல்யோகி
புலித்தோலுடையோன் புரமூன்றெரித்தோன்
பினாகபாணி பேயோடாடி
பூதநாதன் புணர்கங்காளன்
ஞானமூர்த்தி யீசனாதி
ஐம்முகன்பகவன் ஆதிபாண்டரங்கன்
அந்திவண்ணன் ஆலமர்கடவுள்
நந்திநம்பன் நாதன்றற்பரன்
கண்ணுதன்மூர்த்தி கைலையாளியென்
றெண்ணியநாமம் இன்னமும்பலவே.

*   *   *

வடநூற்கரசன் றென்றமிழ்க்கவிஞன்
கவியரங்கேற்று முபயகவிப்புலவன்

செறிகுணத்தம்பற் கிழவோன்சேந்த
னறிவுகரியாகத் தெரிசொற்றிவாகரத்து
முதலாவது தெய்வப்பெயர்த்தொகுதி முற்றிற்று.

2 - வது.—மக்கட்பெயர்த்தொகுதி.

*   *   *

கற்றநாவினன் கேட்டசெவியினன்
முற்றவுணர்ந்த மூதறிவாள
னகரிகநாட்டத் தாரியனநுவந்தை
தேருங்காட்சிச் சேந்தன்றிவாகரத்
திரண்டாவது மக்கட்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

3 - வது.—விலங்கின் பெயர்த்தொகுதி.

*   *   *

காதலீகையிற் போதிப்பெருந்தவன்
றெவ்வடுகாலவைவேவெழிலி
யவ்வைபாடிய வும்பற்கிழவன்
றேன்முர்ச்சேந்தன் றெரிசொற்றிவாகரத்துள்
மூன்றுவதுவிலங்கின்பெயர்த்தொகுதி முற்றிற்று.

4 - வது.—மரப்பெயர்த்தொகுதி.

*   *   *

நாடேபிறர்நாட்டிற்குவமையாறே
காலமறிந்துதவுங் காவிரிதானே
யாடவர்திலக னம்பன்மன்ன
னீடிசைத்தலைவ னநுந்தைசேந்த
னய்ந்ததிவாகரத் தரும்பொருள்விளக்கு
நான்காவதுமரப்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

5 - வது —இடப்பெயர்த்தொகுதி.

*   *   *

ஒருவற்கொருவ னுகியுதவியும்
பரிசின்மாக்கள் பற்பலராயினுந்
தானொருவன்னே தரணிமானவன்
செந்தமிழ்ச்சேந்தன் றெரிந்ததிவாகரத்
தைந்தாவது இடப்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

6 - வது.—பல்பொருட்பெயர்த்தொகுதி.

*   *   *

வருநற்கங்கை வடதிசைப்பெருமையுந்
தென்றிசைச்சிறுமையு நீக்கியகுறுமுனி

குண்டிகைப் பூம்புனற் காவிரிப்பெரும்பதி
யம்பற்கதிபதி சேந்தன் திவாகரத்
தாறுவதுபல்பொருட் பெயர்த்தொகுதிமுற்றிற்று.

7 - வது.—செயற்கை வடிவப்பெயர்த்தொகுதி.

* * *

மூற்றவப்பயனோ கற்றவப்பயனோ
சாபத்திருக்கிய தேவசாதரிற்
றேற்றமுடையனென வம்பற்றோன்றிய
வியற்கைச்சேந்தன் திவாகரத்தேழாவது
செயற்கைவடிவப் பெயர்த்தொகுதிமுற்றிற்று.

8 - வது.—பண்புபற்றிய பெயர்த்தொகுதி.

* * *

மறக்குறும்போட்டி யறத்தின்வழிநின்று
கலிங்கைத்தண்ணளி புவிபெறவாணையி
னைம்புலனுளு மம்பற்கோமான்
றிண்பெருஞ்சேந்தன் திவாகரத்தெட்டாவது
பண்புபற்றிய பெயர்த்தொகுதிமுற்றிற்று.

9 - வது.—செயல்பற்றிய பெயர்த்தொகுதி.

* * *

அண்ணல்செம்பாதிக் காணியாட்டியைப்
பெண்ணணங்கை மூவுலகும்பெற்றவம்மையைச்
செந்தமிழ்மாலை யந்தாதிபுனைந்த
நாவலனம்பற் காவலன்சேந்த
னியல்வுற்ற திவாகரத்தொன்பதாவது
செயல்பற்றிய பெயர்த்தொகுதிமுற்றிற்று.

10 - வது.—ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

* * *

அரக்கரைப்பொருத முரட்போர்வில்லும்
பாரதம்பொருத பேரிசைச்சிலையுந்
தாருகற்கடிந்த வீரத்தயிலும்
பாடியபுலவன் பதியம்பற்சேந்தன்
பயில்வுற்ற திவாகரத்துப்பத்தாவ
தொலிபற்றிய பெயர்த்தொகுதிமுற்றிற்று.

11 - வது.—ஒருசொற் பல்பொருட்பெயர்த்தொகுதி.

* * *

புலவிநீக்கிய கலவிச்செல்விக்
கமிழ்துசுவையீந்தவரும்பெறலின்பத்

தொருபெருஞ்செல்வ ணருவந்தைசேந்தன்
பகர்வுற்ற திவாகரத்துப் பதினொன்றாவ
தொருசொற்பல் பொருட்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

End :

12 - வது.—பல்பொருட்கூட்டத் தொருபெயர்த்தொகுதி.

கூறியதுகூறினுங் குற்றமில்லை
வேறொருபொருளை விளக்குமாயின்
முன்னமெய்த பதினொருதொகுதியுள்ளும்
வந்தனவாலொருசொற் பல்பொருட்பெயர்த்
தொகுதியின்வந்த சொற்களென்னெனி
னீண்டுச்சிறப்புவகைக் கெய்தியவை
யீண்டுப்பொதுவகைக் கெய்தவும்படுமே.

* * *

[எண்குணவகைப்பெயர்]

அநந்தஞான மனந்ததரிசன
மநந்தவீரிய மனந்தசுகியே
நாமமின்மை கோத்திரமின்மை
யாயுவின்மை யழியாவின்பமென்
றேயுங்காலை யிறைவனெண்குணம்.

[எண்வகைக்குற்றத்தின்பெயர்.]

ஞாநாவரணியந் தரிசநாவரணியம்
வேதநீய மோகநீய
மாயுநாமங் கோத்திரமந்த
ராயமென்பவெண்வகைக்குற்றம்.

* * *

[எண்வகை வெற்றியின்பெயர்.]

வெட்சிநிரைகவர்தன் மீட்டல்கரந்தையாம்
வட்கார்மேற்செல்வது வஞ்சியா—முட்கா
ரெதிரூன்றல்காஞ்சி யெயில்காத்தனொச்சி
யதுவளைத்த லாகுமுழிஞை அதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்துமிக்கார்.
செருவென்றதுவாகையா
மத்திணைத்தொழிலு மத்திணைப்பூவு
மப்பெயர்பெறுவதந் நிலத்துரியே.

* * *

[பதினெண்பாடையின்பெயர்.]

அங்கம்வங்கங் கலிங்கங்கௌசிகஞ்
சிந்துசோனகந் திரவிடஞ்சிங்கள
மகதங்கோசல மராடங்கொங்கணந்
துளுவஞ்சாவகஞ் சீனங்காம்போச
மருணம்பப்பர மெனப்பதினெண்பாடை.

*　　　*　　　*

செம்பொற்கிடையா னம்பற்சேந்த
னன்னராள னவமிகுநாட்டத்தன்
பன்னியசிறப்பிற் பன்னிரண்டாவது
பல்பொருட்கூட்டத் தொருபெயர்த்தொகுதி
பன்னிருதொகுதியும் பண்பொடுமுற்றின.

சேந்தன் திவாகரம் முற்றிற்று.

8a. அரும்பொருள்விளக்கத் தீபிகை.

Beginning:

பொன்னொளிர்கமலப் புத்தேனுறுந்துழாய்ப் பெருமானும்போற்றுங
கன்னியம்புரிசைத் தில்லைநாதன்றாள் கருத்திற்சேர்த்திப்
பன்னரும்பொருள் விளக்கத் தீபிகைபகர்வேன்பாரிற்
சென்னெறியுளத்தோர் யாருஞ்செவிமடுத்தினிதுகேண்மின். (1)

குளிர்மணிவடநிழற்கீழ்க் குலவுமெம்மடிகடொன்னு
ளொளிகிலாமுதனூல்செப்ப விலக்கணரியையுந்தூக்காற்
றெளியொருவழிநூல்செப்பச் சிலர்சார்பினூலும்போற்றத்
தளிர்பெறவிந்நூல்மூன்றுஞ் சகந்தனிற்றிகழ்ந்ததன்றே. (2)

ஆங்கதுநிற்கப்பின்னு மலகினூலுதித்தவாற்றிற்
றாங்கொருசொற்பொருட்பல் விதத்தொகைதானொன்றுக்கொன்
றோங்கிமிக்குங்குறைந்து மொத்திடாதிருக்கைதன்னாற்
பாங்குயர்சின்னூற்செம்பொருள் கூட்டும்பண்பையெண்ணி. (3)

இலக்கணமுழுதுணர்ந்தோ னிறையிருஞ்சிவாகமத்தின்
றலைக்கடல்முற்றுங்கண்டோன் றொல்லையார்தில்லைமூதூர்
கலக்கறவிளங்கும்பச்சைக் கந்ததேசிகனுமெங்கோன்
சொலத்திகழிகபரத்தை வேண்டியேதொல்லோர்கேட்க. (4)

மாவியல்சிறக்கும்வீரை மண்டலவன்காங்கேயன்
ரேவனுசித்தன்செஞ்சொற்கயாகரனிவராற்சொற்ற
பாவியல்நூற்கூறோர்சொற் பல்பொருட்டொகையெலாஞ்சேர்த்
தோவிலாவளஞ்சிறப்ப வொருபெருநூலதாக. (5)

நவையறுககரமாதி னகரவீறெதுகைதன்னால்
னுவலடிக்கிரண்டுமொன்று நுண்பொருளொருங்குசேர்த்திச்
சுவைதிகழ்சொல்விருத்தத் தொகையெழுநூறுதன்னால்
அவைநலோர்குற்றஞ்சொல்லா ரென்பதையகத்தினெண்ணி (6)

சொற்றனனருத்துளிக்குந் தோட்டலர்கடம்பின்றிண்டோட்
கொற்றவன்முருகன்சேந்திற் குமரவேட்கடிமைபூண்ட
நற்றவவிராசராச நல்சிவப்பிரகாசஞ்சோற்
பெற்றிசேரருமருந்த தேசிகப்பெயரினானே. (7)

இருஞ்சகழ்காத்தம்பிரானா றிருமுன்னூறுடனெண்பத்தைஞ்
சொருங்குசித்திரபானுப் பொச்சமைமகந்திங்களொப்பி
பொருஞ்சிவனிசிவெள்ளிப் பொவுனைதினந்தில்லைமன்றிற்
பெருங்குணத்தோர்க்கரங்கேறுற்ற நூற்பெற்றிதானே. (8)

பாயிரமுற்றும்.

*   *   *   *   *

ககர வெதுகை.

அகவலேயமைத்தலாட லான்றவாசிரியமுப்பேர்
தகவறிவுடனொழுக்கந் தெளிவுஞ்சற்குணமுஞ்சாற்றும்
பகவதியுமையேதுர்க்கி தருமதேவதைப்பேர்பன்னும்
முகவுமாளிகைமுகப்பே மொள்ளுதல்காந்திக்கும்பேர்.

*   *   *   *   *

End:

மன்றமேதெருட்சிமெய்ம்மை வாசமம்பலமேவீதி
நின்றகல்லியாணத்தோடு வெளியெனநிகழ்த்துமேழ்பேர்
கன்றுகைவளையேயற்பங் காட்டியவிளமைகுட்டி
நன்றேயுத்தமத்தினாமம் நல்லறந்தானுமாமே.

வடியுயர்ந்திடுனகார வெதுகையின்வழுத்துஞ்செய்யுட்
படிபுகழொன்றொடேமுப் பானெனப்பகரச்செய்தான்
றுடியிடைமறமின்னாட்குத் தூய்மலர்க்கணியாய்நின்றோ
னடியிணையிறைஞ்சும்செந்தி லருமருந்தையன்றனே.

இருமையொன்றிய திருச்செந்தின்முருகோனையேத்து
மருமருந்தையன்சோற்ற வரும்பொருள்விளக்கங்கற்றோர்
பொருமுரண்டெறப்படுத்தும் புலமைனூற்றறம்விளக்குந்
திருமருங்குறப்பொருத்துஞ் செருக்குடனிருப்பர்தாமே.

அரும்பொருள்விளக்கநிகண்டுமுற்றிற்று.

8b. பதிஞேராவது நிகண்டு மூலமும் பதவுரையும்.

Beginning :

முடிவிலின்பத்தமூவா முதல்வனைப்போற்றிசெய்தே
யடிதொறுமிரண்டுமொன்று மாதியிற்பொருளடக்கி
நடைபெறுககரமாதி னகரவீறெதுகையாகப்
படியுமோர்சொற்பொருட்பல் விதத்தொகைபகராலுற்றும்.

முடிவென்பது-அந்தம், இல்-அது இல்லாத, இன்பத்து - சுகத்தையுடைய, மூவா – கெடாத, முதல்வனை - கருத்தாவை, போற்றிசெய்தே- நமஸ்கரித்தே, அடிதொறும் - பாட்டுகளுடைய அடிகடோறும், இரண்டும் - இரண்டும், ஒன்றும் - ஒன்றும், ஆதியில் - முதலிலே, பொருளடக்கி - பொருளையடக்கி, நடைபெறு - நடக்கப்பட்ட, ககர - ககரவெதுகை, ஆதி - முதலாக, னகர - னகரவெதுகை, ஈறுக - அந்தமாக, படியும் - படிந்திருக்கும், ஓர் - ஒரு, சொல் - சொல்லுக்கு, பொருள் - பொருள்களை, பல்விதம் - நாலுவிதமான, தொகை - தொகுதியை, பகராலுற்றும் - சொல்லுகிறோம்.

பகவனேயீசன்மாயோன் பங்கயன்சினனேபுத்தன்
பகலேநாளொருமுகுர்த்தம் பகலவனடுவேதேசு
மகரமேசுறுப்பூந்தாதாம் வசிகூர்மைவசியம்வாளே
யகமனமனையேபாவ மகலிடமுள்ளுமாமே.

பகவனென்பது: ஈசன் - ஈசுவரனுக்கும், மாயோன் - மகாவிஷ்ணுவுக்கும், பங்கயன் - பிர்மாவுக்கும், சினன் - அருகதேவதைக்கும், புத்தன்-புத்ததேவதைக்கும் பகவனென்றுபெயர். பகலென்பது: நாள்-இராப்பகல் அறுபது நாழிகைக்கும், ஒரு முகுர்த்தம் - மூன்றேமுக்கால் நாழிகைக்கும், பகலவன் - சூரியனுக்கும், நடு - மத்திக்கும், தேசு - பிரகாசத்திற்கும் பகலென்றுபெயர். மகர மென்பது: சுறு - மகரமீனுக்கும், பூந்தாது - பூவின் மகரந்தப்பொடிக்கும், மகரமென்றுபெயர். வசி யென்பது : கூர்மை - கூருக்கும், வசியம் - ஒன்றைக் கைவசியம் பண்ணுகிறதற்கும், வாள் - கத்திக்கும், வசியமென்று பெயர். அகமென்பது : மனம் - மனத்துக்கும், மனை - வீட்டுக்கும், பாவம் - பாவத்துக்கும், அகலிடம் - பூமிக்கும், உள் - இருதயத்துக்கும் அகமென்றுபெயர்.

End :

குன்றுவேதண்டத்தோடு குறைவறுசதையநாளே
அன்றிலோர்புள்ளுமூல நாளெனவாமிரண்டே
மன்றமேவெளியினமம் வாசமம்பலமுமப்பேர்
மன்றலேபரிமளப்பேர் மருவுகல்லியாணமாமே.

குன்றென்பது : வேதண்டம் - மலைக்கும், குறைவறு - குறையற்ற, சதையநாள் - சதையநட்சத்திரத்துக்கும், குன்றென்றுபெயர். அன்றி

லென்பது: ஓர்புள் - அன்றிற்பட்சிக்கும், மூலநாள் - மூலநட்சத்திரத் துக்கும், அன்றிலென்றுபெயர். **மன்றம**மென்பது: வெளி - வெளிக் கும், வாசம் - வாசனைக்கும், அம்பலம் - சபைக்கும், மன்றமென்று பெயர். **மன்ற**லென்பது: பரிமளம் - வாசனைக்கும், மருவு - பொருந் திய, கலியாணம் - கலியாணத்துக்கும் மன்றலென்றுபெயர்.

னகரவெதுகை முற்றுப்பெற்றது.

ஆகவெதுகை பதினெட்டுக்கும் விருத்தச்செய்யுள் 309.

விகாரிஹூ கார்த்திகைமீ 11உ எழுதிமுற்றுப்பெற்றது.

---

9. தண்டியலங்காரம் மூலமும் உரையும்.

1 - வது பொதுவணியியல்.

சொல்லின்கிழத்தி மெல்லியலிணையடி
சிந்தைவைத்தியம்புவல் செய்யுட்கணியே.

எ-து. இவ்வதிகார மணியினதிலக்கண முணர்த்தினமையி னணிய திகார மென்னும் பெயர்த்து.

இவ்வதிகாரத்தின் முதற்கணுள்ளத்து அணிபெறுஞ்செய்யுட்கட்கும் ஒருசாரணிகட்கு மிலக்கணமுணர்த்தினமையாற் **பொதுவியலோத்** தென்னும் பெயர்த்து.

இச்சூத்திரந் **தெய்வவணக்கமு முரைக்கும்பொருளு** முணர் - ற்று. (இதன் பொழிப்பு.) கலைமடந்தை துணைத்தாள் கருத்துள்வைத்து யாப்பிற்கலங்கார விலக்கணஞ் சொல்லுவனென்றவாறு. [' சொல்லி ன் கிழத்தி ' எனினும் 'கலைமடந்தை' எனினுமொக்கும். 'இணையடி' எனினும் ' துணைத்தாள் ' எனினுமொக்கும். ' சிந்தைவைத்து ' எனி னும் ' கருத்துள் வைத்து ' எனினுமொக்கும். உள் என்பதேழாம் வேற்றுமை தொக்குநின்று விரித்துரைக்கப்பட்டது. 'இயம்புவல் எனினும் ' சொல்லுவல் ' எனினுமொக்கும். 'செய்யுள்' எனினும் ' யாப்பு ' எனினுமொக்கும். 'அணி' எனினும் ' அலங்காரம் ' எனி னுமொக்கும். அலங்காரமென்றது ஈண்டு அவ்வலங்கார விலக்கண த்தை. ஏ யென்பது - ஈற்றசை. "வாழ்த்துதலுந் தெய்வவணக்கமு முரைக்கும், வற்றபொருளுணர்த்துதலு மூலகவிலக்கணம்" என்றார் **ஆசிரியர்**; ஆதலான் ஈண்டுத் தெய்வவணக்கமு முரைக்கும்பொருளு முணர்த்தப்பட்டது. இலக்கியத்திற்கோதிய விதனை இலக்கணத்திற்கு யோதி யுடம்பொடுபுணர்த்தா ராசிரியராகலான் ஈண்டுமெவ்வாறே யு ரைக்கப்பட்டது.]* ஒழிந்தனவகல முரையிற்கொள்க.

---

* The portion under [ ] is not found in the printed edition.

செய்யுளென்பவை தெரிவுறவிரிப்பின்
முத்தகங்குளகந் தொகைதொடர்நிலையென
வெத்திறத்தனவு மீரிரண்டாகும்.

என்...னின் : செய்யுட்கு அணியிலக்கணமுணர்த்துவலென்றார், செய்யுளாமாறுணர்ந்தே அணியுணரப்படுமாகலான் அவ்வணிபெறுஞ் செய்யுளினது பெயரும் முறையுந் தொகையுமுணர் - ற்று.

செய்யுளென்று கூறப்படுவன விளங்கவிரித்துணர்த்துங்கால் முத்தகச்செய்யுளும், குளகச்செய்யுளும், தொகைநிலைச்செய்யுளும், தொடர்நிலைச்செய்யுளுமென நான்குவகைப்படு மெவ்வகைப்பட்ட பாவும் என்றவாறு..

'செய்யுள்' என்பதனை நான்கினோடும், 'நிலை' என்பதைப் பின்னிரண்டினோடுங்கூட்டி யுரைக்கப்பட்டது. 'முத்தகம் குளகம்' என்பன வடமொழிப்பெயர், ஏனைய தமிழ் மொழிப்பெயர்; அவையாமாறு முன்னரறியப்படும்.

அவற்றுள்,
முத்தகச்செய்யு டனிநின்றுமுடியும்.

என்...னின் : முத்தகச்செய்யுளாமாறுணர் - ற் று.

மேற்சொன்னநான்கனுள் **முத்தகச்செய்யுள்** என்பது தனியே நின்றொருபொருள் பயந்து முற்றுப்பெறுவது, எ - று.

வரலாறு :—"என்னைச்சிலமடவா ரெய்தற்கெளியவோ, பொன்னே யனபாயன்பொன்னெடுந்தோள்—முன்னே, தனவேயென்றருஞ் சயமடந்தை தோளாம், புனவேய்மிடைந்த பொருப்பு" எ-து, பொன்னையொப்பா யடிப்படத்தனக்கே சேமமாக நினைத்துத் துய்க்கின்ற கொற்றவையுடைய தோளாகிய செறிந்தவேயினாலே நெருங்கப்பட்ட பொருப்பாகிய அனபாயனுடைய வழகினையுடைத்தாகிய தோளானவை என்னையொக்குந்தன்மையையுடையராகிய பெண்டிர் பலரும் புல்லுதற்கெளிவந்தனவாமோ; ஆகா, எ-று. வேய்மிடைந்த பொருப்பாகிய தோளெனக்கூட்டுக; தோளாகிய பொருப்பென்பாரு முளர். 'என்' என்பதனை இரக்கத்தின்கட் குறிப்பென்பாருமுளர். 'என்' என்கிறது 'என்னை' என இரண்டாம் வேற்றுமை விரிந்ததெனக்கொள்க. 'சில' என்பது பல. [எய்துதல் - கூடுதல், பொன்-அழகு, அனபாயன்-அபாயமானபாவமில்லாதவன். நெடுந்தோள் - பெரியதோள். 'என்று' என்றது 'நினைத்து' என்றவாறு. சயமடந்தை - வனதுர்க்கை. புனவேய் - செறிந்தவேய், மிடைதல் - நெருங்குதல், பொருப்பு - மலை எ - று.]*

குளகம்பலபாட்டொருவினைகொள்ளும்.

என்...னின் : குளகச்செய்யுளாமாறுணர் - ற் று.

---

* The portion under [ ] is not found in the printed edition.

குளகச்செய்யுள் என்பது பலபாட்டா யொருவினைகொண்டு முடிவதென்றவாறு.—'ஒருவினை' என்ற விதப்பான் ஒருபெயர்கொண்டும் முற்றுமெனக்கொள்க. இதற்கிலக்கியம் வந்தவழிக்கண்டுகொள்க.

தொகைநிலைச்செய்யுட் டோன்றக்கூறி
னொருவனுரைத்தவும் பல்லோர்பகர்ந்தவும்
பொருளிடங்காலந் தொழிலெனநான்கினும்
பாட்டினுமளவினுங் கூட்டியதாகும்.

என்...னின்: தொகைநிலைச்செய்யுளாமாறுணர் - ற்று.

தொகைநிலைச்செய்யுள் என்பதனை விளங்கச்சொல்லின் ஒருவராலுனாக்கப்பட்டுப்பலபாட்டாய் வருவனவும், பலராலுரைக்கப்பட்டுப் பலபாட்டாய் வருவனவுமாம். அவை பொருளாற் றொகுத்தபெயர் பெற்றனவும், இடத்தாற்றொகுத்த பெயர்பெற்றனவும், காலத்தாற்றொகுத்தபெயர் பெற்றனவும், தொழிலாற்றொகுத்தபெயர் பெற்றனவும், பாட்டாற்றொகுத்த பெயர்பெற்றனவும், அளவாற்றொகுத்தபெயர்பெற்றனவுமாம் என்றவாறு. அவற்றுள் ஒருவராலுரைக்கப்பட்டது **திருவள்ளுவப்பயன்.*** பலராலுரைக்கப்பட்டது - **நெடுந்தொகை.** இஃதெல்லாத் **தொகைக்கும் பொதுவிலக்கணம்.** பொருளாற்றொகுத்தது **புறநானூறு.** இடத்தாற்றொகுத்தது **களவழிநாற்பது.** காலத்தாற்றொகுத்தது **கார்நாற்பது.** தொழிலாற்றொகுத்தது **ஐந்திணை.** பாட்டாற்றொகுத்தது - **கலித்தொகை.** அளவாற்றொகுத்தது - **குறுந்தொகை, இவைசிறப்பிலக்கணம்.** 'கூட்டிய' என்றவிதப்பான் இவ்வறுவகையானுமன்றிப் பிறவாற்றாற் பெயர்பெற்று வருவனவுமுளவாயினறிந்துகொள்க.

*   *   *   *   *

---

2 - வது பொருளணியியல்.

என்னையுடையாள் கலைமடந்தையெவ்வுயிர்க்கு
மன்னையுடையவடித்தளிர்க—வின்னளிசூழ்
மென்மலர்க்கேகன்று மெனவுரைப்பர்மெய்யிலா
வன்மனத்தேதங்குமோவந்து.

தன்மையுவமை யுருவகந் தீவகம்
பின்வருநிலையே முன்னவிலக்கே
வேற்றுப்பொருள்வைப்பே வேற்றுமை விபாவனை
யொட்டேயதிசயந் தற்குறிப்பேற்ற
மேதநுட்ப மிலேசநிரனிறை,

---

* திருக்குறள்.

யார்வமொழிசுவை தன்மேம்பாட்டுரை
ப்ரியாயம்மே சமாயிதமுதாத்த
மரிதுணரவநுதி சிலேடைவிசேட
மொப்புமைக்கூட்ட மெய்ப்படுவிரோத
மாறுபடுபுகழ்நிலை புகழாப்புகழ்ச்சி
நிதரிசனம் புணர்நிலை பரிவருத்தனையே
வாழ்த்தொடு சங்கீரணம் பாவிகமிவை
யேற்றசெய்யுட்கணியேழைந்தே.

எ - து. பொருளானு மணிகள தியல்புணர்த்தினமையாற் பொருள ணியியல் என்னும் பெயர்த்து. அஃதேல், சொல்லானுணர்த்தப்படு மணி யீண்டுணர்த்திலரோ வெனின், மிகுதி பொருண்மேலதாகலா ன் மிக்கதனாற் பெயர்கொடுத்தது. இச்சூத்திரம் அலங்காரங்களின் பெயரும் முறையும் தொகையுமுணர் - ற்று.

*　　*　　*　　*　　*

3 - வது சொல்லணியியல்,

எழுத்தின்கூட்ட மிடைபிறிதின்றியும்
பெயர்த்தும்வேறு பொருடரின் மடக்கெனும்பெயர்த்தே.

இவ்வோத் தென்னபெயர்த்தோ வெனின், சொல்லானு மணிகளதி யல்புணர்த்தினமையின் சொல்லணியியல் என்னும் பெயர்த்து. [ஆ யின் முன்பொருளணியியலோ டியைபென்னையெனின், பொருளுஞ் சொல்லும் வேற்றுமையின்மையி னதனோடியல்புடைத்தாய் அதன் பின்வைக்கப்பட்டது.]* அஃதேல், குற்றமுங்குணமு மீண்டேயன் றேகூறியது, இதனைச் சொல்லணியியல் என்ற தென்னையெனின், அ வையுங்கூறினாரேனும் அவை சிறுபான்மையவாதலானும் இத்துணைச் சிறப்புடையன வன்மையானும், சொல்லானு மணிகளது தலைமையா னும் பன்மையானு மப்பெயர்த்தாயிற்று. என்னை: "ஒருபெயர்ப்பொ துச்சொ லுளபொருளொழிய்த், தெரிபுவேறுகிளர்த்த றலைமையும் பன் மையு, முயர்திணை மருங்கினு மஃறிணை மருங்கினும்" என்றாராகலி ன். இச்சூத்திரம் மடக்கு என்னும் அலங்காரப் பொதுவிதியுணர்-ற் று.

(இ - ள்.) எழுத்துக்களது தொகுதி பிறவெழுத்தானுஞ் சொல்லா னும் இடையிடாதும் இடையிட்டும் வந்து, பெயர்த்தும் வேறு பொரு ள்விளைப்பது மடக்கு என்னு மலங்காரமாம், எ - று. எழுத்துக்களது தொகுதியெனவே இரண்டு முதல், எனைத்தெழுத்தானும் வருமென்க. 'பிறிதின்றியும்' எ - து எதிர் நோக்கிய வெச்சவும்மை.† 'பெயர்த் தும்' எ - து இறந்தது தழீஇய வெச்சவும்மை.

*　　*　　*　　*　　*

சொல்லணியியல் முற்றும்.

தண்டியலங்கார மூலமும் உரையும் முற்றுப்பெற்றன.

---

* Not found in the printed edition.

† எதிரதுதழீஇயவெச்சவும்மை.

தண்டியலங்கார வுரையின்

உதாரணச்செய்யுள் அகராதி.

No.	Quotation.	Manuscript page.	Printed page.	From what book.
1	அகரமுதலவெழுத்தெல்லா ...	184	101	திருக்குறள், 1.
2	அகலல்துற்றேரோ	184	100	
3	அகலிருவிசும்பிற்	25	13	பெரும்பாணாறு, 1-2.
4	அங்கண்மாஞாலததகல் ...	22	12	
5	அங்கமிலாத வனங்கன் ...	202	109	
6	அங்கைமலரு	56	32	
7	அடிநோக்கினாழ்கடல்	68	39	
8	அடையாரடையா	144	83	
9	அப்போதடுப்பதறி	82	48	
10	அமலைகலமகலலபய	169	94	
11	அம்பிகாப்தியே	194	106	
12	அம்பொற்பணைமுக	121	71	
13	அம்போருகஞ்செற்ற	85	49	
14	அரிமாவன்னவணங்கு ...	32	18	
15	அருவியங்குன்ற	116	68	
16	அருளின்றிருவுருவே	181	99	
17	அலைகடல்களேழுந்	213	115	
18	அவிழ்ந்த துணியிசைக் ...	19	10	
19	அவிழ்ந்தனதோன்றி	{ 75 202	43 110	
20	அவ்வானிலங்குபிறை	33	18	
21	அளபொன்றேறிய	192	105	
சென்னியுறவணங்கிச் சேர்துமெம்முள்ளத்து
முன்னியவைமுடிக வென்று.

எ-து. வானிடுவில்லின் வரவறியா - வானிலேயிடுகின்ற வில்லினது தோற்றமு மழிவும்போன்ற பிறப்பிறப்பாகிய வியல்பையறிந்து, வாய்மையாற் கானிலந்தோயாக்கடவுளை - நிலத்திற்கால்தோயாத கடவுளையுண்மையாகவே, யாநிலஞ்சென்னி யுறவணங்கிச்சேர்தும் - யாமநிலத்தைச்சென்னியுறவணங்கி யடைதும், எம்முள்ளத்துமுன்னியவை முடிகவென்று - எம்மனத்து நினைத்தனமுடிவதாகவென்றவாறு. மனத்தினினைவு பிறப்பிறவாய்மையென்பது நெஞ்சு வாக்கு உண்மையாதல். கடவுள்வாழ்த்து.

* * * * *

End:

காமநூதலியல்.

* * * * *

கண்மூன்றுடையானுங் காக்கையும்பையரவு
மென்னீன்றயாயும் பிழைத்ததென்—பொன்னீன்ற
கோங்கரும்பன்ன முலையாய்பொருள்வயிற்
பாங்கானர்சென்ற நெறி.

எ-து. கண்மூன்றுடையானும் - மூன்றுகண்ணையுடையவனும், காக்கையும் - காக்கையும், பை - படத்தினையுடைய, அரவும் - சர்ப்பமும், என் - என்னை, ஈன்ற - பெற்ற, யாயும் - தாயும், பிழைத்ததென் - பி

ழைத்ததில்லை ; பொன் - பொன்னே, ஈன்ற - கொடுத்த, கோங்கு - கோங்கினுடைய, அரும்பன்ன - அரும்புபோலும், முலையாய் - முலையினை யுடையவளே, பாங்கனூர் - நாயகனனவர், பொருள்வயின் - பொருளி னிடத்திலே, சென்ற - போன, நெறி - வழியே, பிழைத்தது - பிழை யைச்செய்தது. (10)

நாலடியார் முற்றியது.

சுபானு௵ தைமீ 6உ.

---

18. ஆசாரக்கோவை மூலமும் உரையும்.

Beginning :

ஆரெயின்மூன்று மழித்தானடியேத்தி
யாரிடத்துத்தானறிந்த மாத்திரையானுசார
மாருமறிவதறனுகமற்றவற்றை
யாசாரக்கோவை யெனத்தொகுத்தான்றீராத்
திருவாயிலாயதிறல்வண்கயத்தூர்ப்
பெருவாயன் முள்ளியென்பான்.

எ-து. பகைவரானழித்தற்கரிய மும்மதிலையும் நகைத்தழித்த முதலவனடியைத்துதித்து, இருடிகள்சொல்லிய நூல்களில் தானறிந்தவளவினனே யெல்லாருமறிய அறனுயுள்ள ஆசாரமாகிய மற்றவற்றை ஆசாரக்கோவை யெனச்செய்துதிரட்டினன்; நீங்காததிருமடந்தைக்குவாயிலாகிய திறலையுடைய வண்கயத்தூர்ப் பெருவாயன் மகனுகிய முள்ளியென்னும்பெயரையுடையான். எ-று.

நன்றியறிதல்பொறையுடைமை யின்சொலோ
டின்னுதவெவ்வுயிர்க்குஞ் செய்யாமைகல்வியோ
டொப்புரவாற்ற லறிதலறிவுடைமை
நல்லினத்தாரோடு நட்டலிவையெட்டுஞ்
சொல்லியவாசாரவித்து.

எ-து. தனக்குபிறர்செய்த நன்றியறிதலும், பொறையும், இன்சொல்லும், எல்லாவுயிர்க்கு மின்னுதனசெய்யாமையும், கல்வியும், ஒப்புரவைமிகவறிதலும், அறிவுடைமையும், நல்லினத்தாரோடு நட்டலுமென இவ்வெட்டுவகையும் நல்லாராற்சொல்லப்பட்ட ஆசாரங்கட்குக் காரணம். எ-று.

பிறப்புநெடுவாழ்க்கை செல்வம்வனப்பு
நிலக்கிழமைமீக்கூற்றங் கல்விநோயின்மை
யிலக்கணத்தாலிவ்வெட்டுமெய்துபவென்று
மொழுக்கம்பிழையாதவர்.

எ-து. நற்குடிப்பிறப்பு, நெடியவாழுள், செல்வம், அழகுடைமை, நிலத்துக்குரிமை, சொற்செலவு, கல்வி, நோயின்மை, என்றுசொல்லப்பட்ட இவ்வெட்டினை இலக்கணத்தோடு நிரம்பப்பெறுவர் என்றுமாசாரந்தப்பாமலொழுகுவார், எ-று. (2)

தக்கணைவேள்வி தவங்கல்வியிந்நான்கு
மூப்பாலொழுக்கினாற் காத்துய்க்க வுய்க்காக்கா
லெப்பாலுமாகாகெடும்.

எ-து. குரவர்க்குத் தக்கணைகொடுத்தலும், யாகம்பண்ணுதலும், தவஞ்செய்தலும், கல்வியுமென இந்நான்கினையு மூன்று வகைப்பட்டவிதியாலே பாதுகாத்துநடாத்துக; நடாத்தாக்கால் எவ்வுலகத்தின்கண்ணும் தனக்குப்பயனாகாவா யிந்நான்குங்கெடும், எ-று—[முப்பாலொழுக்கம் அறநூல்விதி, பொருணூல்விதி, இன்பநூல்விதி.] (3)

வைகறையாமந் துயிலெழுந்துதான்செய்யு
நல்லறமுமொண்பொருளுஞ் சிந்தித்துவாய்வதிற்
றந்தையுந்தாயுந் தொழுதெழுகவென்பதே
முந்தையோர் கண்டமுறை.

எ-து. வைகறையாகியபின்யாமத்திலேதுயிலெழுந்து தான்பிற்றைஞான்றுசெய்யும் நல்லறத்தையும் ஒள்ளியபொருட்கு வருவாயாகிய காரியத்தையுமாராய்ந்து சிந்தித்துப் பின்னைக் கங்குல்புலந்தாற் பழுதின்றித் தந்தையையும் தாயையும் தொழுதெழுந்து ஒருகாரியத்தைச் செய்யத்தொடங்கவென்றுசொல்லப்படும் ஒழுக்கம் அறிவுடையபழையார்சொல்லியமுறைமை, எ-று. (4)

End ;

உரற்களத்துமட்டிலும் பெண்டிர்கண்மேலு
நடுக்கற்றகாட்சியார் நோக்காரெடுத்திசையா
ரில்லம்புகாஅர்விடல்.

எ-து. சோர்வற்ற அறிவையுடையவர் ஆரவாரஞ்செய்யுமிடத்தும் மடைப்பள்ளியிலும், பெண்டிர்களுறையிடத்தும், நோக்கார் எடுத்துரையார், இல்லத்துட்புகார்; ஆதலால், நீவிடுக, எ-று. (99)

அறியாததேயத்தா னாதுலன்மூத்தா
னிளையானுயிரிழந்தா னஞ்சினானுண்பா
னரசர்தொழிறலை வைத்தான்மணாளனென்
றென்பதின்மர்கண்டீ ருணாக்குங்கான் மெய்யான
வாசாரம் வீடுபெற்றார்.

எ-து. அறியாததேசத்தான், வறியோன், மூத்தோன், சிறுவன், உயிரிழந்தவன், பயமுற்றவன், உண்பவன், அரசர்தொழிலில்தலைவைத்தவன், மணமகன் என்னுமிவ்வொன்பதின்மரும் உண்மையாயுளைக் குமிட்த்து ஆசாரமிலிகளாவார். எ-று. (100)

ஆசாரக்கோவை முற்றிற்று.

---

19. திரிகடுகம் மூலமும் உரையும்.

Beginning :

காப்பு.

கண்ணகன்ஞாலமளந்ததூஉங் காமருசீர்த்
தண்ணறும்பூங்குருந்தஞ் சாய்த்ததூஉ—நண்ணிய
மாயச்சகட முதைத்ததூஉமிம்மூன்றும்
பூவைப்பூவண்ணனடி.

(இதன்பொருள்) இடமகன்ற பூமியையளந்ததும், விரும்பப்பட்ட சிறப்பையுடைய குளிர்ச்சிபொருந்திய பரிமளிக்கின்ற மலர்களையுடைய குருந்தமரத்தை முறித்ததும், கஞ்சனு லேவப்பட்டுத் தன்னை வருத்தும்படி கிட்டிவந்த சகடத்தை யுதைத்ததும், ஆகிய விம்மூன்றுஞ் செய்தவை காயாமலர்போலும் நிறத்தினையுடைய திருமாலினது திருவடிகளாம், என்று எடுத்துக்கொண்டநூல் இனிது முடித்தற்பொருட்டுக்கடவுள் வணக்கஞ்செய்யப்பட்டது.

செய்தவையென்பது சொல்லெச்சம். இந்நூலுள் பாட்டுத்தோறும் மும்மூன்று பொருள்கள் கூட்டிச்சொல்லப்படுகின்றமை தோன்ற இவ்வணக்கப்பாட்டிலு மப்படியே சொன்னர்.

நூல்.

அருந்ததிக்கற்பினார்தோளுந்திருந்திய
தொல்குடியின்மாண்டார்தொடர்ச்சியுஞ்—சொல்லி
னரிலகற்றுங்கேள்வியர் நட்புமிம்மூன்றந்
திரிகடுகம்போலுமருந்து.

(இதன்பொருள்) அருந்ததிபோலுங் கற்பினையுடைய மகளிரதுதோளும், குற்றமற்ற பழைய குடிப்பிறப்பில்வந்து பெருமைபெற்றவரோடு கொள்ளுமுறவும், கற்கப்படும் நூலிடத்தே குற்றங்களை நீக்கவல்ல கேள்வியையுடையவரோடு செய்யப்படும் நட்பும், ஆகிய விம்மூன்றும் ஒருவனுக்குத் திரிகடுகம்போலும் மருந்துகளாம், எ-று.

கற்பு நற்குண நற்செய்கைகளோடு தன்கணவனுக்கு வழிபடுதல். மாட்சிமை - பெருமை, சொல்லென்றது-நூலுக்கு ஆகுபெயர். அரில் - குற்றம்; அதாவது சந்தேகவிபரீதம். திரிகடுகம் - சுக்கு திப்பிலி மிளகு என்கிற விம்மூன்றுங் கூடியது. "திரிகடுகஞ் சுக்கொடு திப்பிலி மிளகு மாகும்" என்பது சூளாமணி நிகண்டு. சுக்கு முதலிய மூன்றும் போல் அத்தோள்முதலிய மூன்றும் ஒருவனுக்குத் துன்பம் நீக்கி இன்பஞ்செய்தலா லிவற்றிற்கு அவை உவமானமாயின. இம்முதற் பாட்டிற் சொல்லப்பட்ட திரிகடுகமென்னுஞ் சொல்லே சிறப்புப்பற்றி இந்நூலுக்கும் பெயராகக்கொள்ளப்பட்டது.

* * * * *

End :

பத்திமைசான்றபடையும் பலர்தொகினு
மெத்துணையுமஞ்சாவெயிலரணும்—வைத்தமைந்த
வெண்ணினுலவா விழுநிதியுமிம்மூன்று
மண்ணாளும்வேந்தர்க்குறுப்பு.

(இதன்பொருள்) தன்மேலன்புநிறைந்த சேனையும், சத்துருக்கள் பலர் சேர்ந்துவந்தாலும் எவ்வளவும் பயப்படவேண்டாத மதிலரணும், எண்ணிக்கையி லகப்படாதபடி வைக்கப்பட்டு நிறைந்த சீரியதிரவியமும், ஆகிய விம்மூன்றும் பூமியையாளுகின்ற அரசர்க்கு அவயவங்களாம், எ-று. (100)

திரிகடுகம் முற்றிற்று.

---

20. நீதிநெறிவிளக்கம் மூலமும் பதவுரையும்.

Beginning :

நீரிற்குமிழியிளமைநிறைசெல்வ
நீரிற்சுருட்டு நெடுந்திரைகள—நீரி
லெழுத்தாகும்யாக்கை நமரங்காளென்னே
வழுத்தாததெம்பிரான்மன்று.

(இதன்பொருள்) இளமை - இளமைப்பருவமானது, நீரில் - நீரினிடத்துண்டாகும், குமிழி - குமிழிபோல நிலையில்லாததாம்; நிறைசெல்வம் - நிறைந்த செல்வமானது, நீரில் - நீரினிடத்து, சுருட்டும் - காற்றினாற் சுருட்டப்படும், நெடுந்திரைகள் - நெடிய அலைகள்போல நிலையில்லாததாம்; யாக்கை - உடம்பானது, நீரில் - நீரிலெழுதிய, எழுத்தாகும் - எழுத்துப்போல நிலையில்லாததாம்; ஆதலால், நமரங்காள் -

நம்மவரோ! எம்பிரான்-நங்கடவுளாகிய நடேசனுடைய, மன்று - அடி பலத்தை, வழுத்தாதது-வழுத்தாமலிருப்பதற்கு, என்-காரணம்யாது. ஏகாரம், அசை.

*　　*　　*　　*　　*

End :

ஐயந்திரிபின்றளந்துத்தியிற்றெளிந்து
மெய்யுணர்ச்சிக்கண்விழிப்பத்தூங்குவார்தம்முளே
காண்பதேகாட்சி கனவுநனவாகப்
பூண்பதே தீர்ந்தபொருள்.

(இதன்பொருள்) அளந்து - வேதாகமங்களாகிய அளவையினல் ஆன்மசொரூபத்தையறிந்து, ஐயம் - பின்னர் அதன்கண் சந்தேகமும் திரிபு - விபரீதமும், இன்று-இல்லாமல், உத்தியின் - கருத்தளவையால், தெளிந்து - நிச்சயித்து, மெய்யுணர்ச்சிக் கண்விழிப்ப - மெய்யறிவாகிய கண்விழியாநின்று, தூங்குவார் - ஞானநித்திரைசெய்கிறவர்கள்-தம்முளே - தம்முள்ளத்தில், காண்பதேகாட்சி - காணுவதே காட்சியாம், கனவு - அத்தூக்கத்தில் வெளிப்படுங்கனவே, நனவாகப் பூண்பதே - சாக்கிரமாகப் பொருந்துவதே, தீர்ந்த பொருள் - முடிந்தபயனும், (102)

நீதிநெறிவிளக்கம்.

உரையுடன் முற்றிற்று.

---

21. அறநெறிச்சார மூலம்.

Beginning :

தாவின்றியெப்பொருளுங் கண்டுணர்ந்து தாமரைப்
பூவின்மேற்சென்ருன் புகழடியை- நாவிற்
றுதித்தீண்டறநெறிச்சாரத்தைத்தோன்ற
விரிப்பன் சுருக்காய்விரைந்து. (1)

மறையுறையுங் காமத்துறையுமயங்கிப்
பிறவுரையுமல்கிய ஞாலத்- தறவுரை
கேட்குந்திருவுடையாரோ பிறவியை
நீக்குந்திருவுடையார். (2)

*　　*　　*　　*

End :

எந்நூல்களோதினுங் கேட்பினுமென்செய்யும்
பொய்ந்நூலவற்றின் பொருடெரித்து- மெய்ந்நூ
லறநெறிச்சாரமறிந்தான் வீடெய்துந்
திறநெறிச்சாரந் தெளிந்து. (224)

அவன்கோலிவன்கோலென் றையப்படாதே
சிவன்கணேசெய்ம்மின்கள் சிந்தை-' சிவன்ருனு
நின்றுகால்சீக்கு நிழறிகழும்பிண்டிக்கிழ்
வென்றசீர்முக்குடையான் வேந்து. (225)

முனைப்பாடியானேச்சூர் முக்குடைச்செல்வன்
தனைப்பாடிவந்தோர்க்குத்தந்த- பரிசில்
வினைப்பாடுகெட்டழித்து வீட்டின்பநல்கி
நினைப்பாடிவந்தோர்க்கு நீமறகொன்ருன்
'நின்றவிளக்குப்போலிருந்து. (226)

அறநெறிச்சாரம் முற்றிற்று.

---

22. பெரிய புராணம்.

திருத்தொண்டர் புராணம்.

திருமலைச்சருக்கம்.

Beginning:

உலகெலாமுணர்ந் தோதற்கரியவ
னிலவுலாவிய நீர்மலிவேணிய
னலகில்சோதிய னம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்தி வணங்குவாம். (1)

ஊனடைந்த வுடம்பின்பிறவியே
தானடைந்த வுறுதியைச்சாருமாற்
றேனடைந்த மலர்ப்பொழிற்றில்லையின்
மானடஞ்செய்வரதர் பொற்ருடொழ. (2)

எடுக்குமாக்கதையின் றமிழ்ச்செய்யுளா
னடக்குமேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கையைந்துடைத் தாழ்செவிநீண்முடிக்
கடக்களிற்றைக் கருத்துளிருத்துவாம். (3)

மதிவளர்சடைமுடி மன்றுளாரைமுன்
றுதிசெயுநாயன்மார் தூயசொன்மலர்
பொதிநலனுகர்தரு புனிதர்பேரவை
விதிமுறையுலகினில் விளங்கிவெல்கவே. (4)

அளவிலாத பெருமையராகிய
வளவிலாவடியார் புகழ்கூறவெள்
ளளவுகூட வுரைப்பரிதாயினும்
அளவிலாசை துரப்பவறைகுவேன். (5)

தெரிவரும்பெருமைத் திருத்தொண்டர்தம்
பொருவருஞ்சீர் புகலலுற்றேன் முற்றப்
பெருகுதண் கடலூற்றும் பெருநசை
யொருசுணங்கனை யொக்குந்தகைமையேன். (6)

செப்பலுற்ற பொருளின்சிறப்பினு
லப்பொருட்குரையாவருங்கொள்வரா
லிப்பொருட்கெனுரை சிறிதாயினு
மெய்ப்பொருட்குரியார் கொள்வர்மேன்மையால். (7)

மேயவிவ்வுரைகொண்டு விரும்புமாஞ்சீர்
சேயவன் றிருப்பேரம்பலஞ்செய்ய
தூயபொன்னணிச் சோழனீடுழிபா
ராயசீரனபாயனரசவை. (8)

அருளுநீர்மைத் திருத்தொண்டறிவருந்
தெருளுநீரிது செப்புதற்காமெனில்
வெருளின்மெய்மொழி வானிழல்கூறிய
பொருளினுகுமெனப் புகல்வாமன்றே. (9)

(வேறு.)

இங்கிதனுமங்கூறி னிவ்வுலகத்து முன்னுட்
டங்கிருளிரண்டின்மாக்கள் சிந்தையுட்சார்ந்துநின்ற
பொங்கியவிருளையேனைப் புறவிருள்போக்குகின்ற
செங்கதிரவன்போனீக்குந் திருத்தொண்டர்புராணமென்பாம்.

*　　*　　*　　*　　*

End :

திருநாவுக்கரசர்வளர் திருத்தொண்டினெறிவாழ
வருஞானத்தவமுனிவர் வாகீசர்வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன்பேருலகி
லொருநாவுக்குரைசெய்ய வொண்ணுமையுணராதேன். (1)

*　　*　　*　　*　　*

திலதவதியார்பிறந்து சிலமுறையாண்டகன்றதற்பி
னலகில்கலைத்துறை தழைப்ப வருந்தவத்தோர்நெறிவாழ
வுலகில்வருமிருணீக்கி யொளிவிளங்குங்கதிர்பொற்பின்
மலர்மருணீக்கியார்வந் தவதாரஞ்செய்தார். (18)

மாதினியார் திருவயிற்றின்மன்னியசீர்ப்புகழனூர்
காதலனுருதித்ததறபின்கடன் முறைமைமங்கலங்கள்
மேதகுநல்வினைசிறப　　*　　*　　*

23. திருவிளையாடற் புராணம்.

Beginning :

பாயிரம்,

மல்குகவேதவேள்வி வழங்குகசுரந்துவானம்
பல்குகவரங்களெங்கும் பரவுகவறங்களின்ப
நல்குகவுயிர்கட்கெல்லா நான்மறைச்சைவமோங்கிப்
புல்குகவுலகமெல்லாம் புரவலன்செங்கோல்வாழ்க.

*　　*　　*　　*　　*

அண்ணல்பாற்றெளிந்தநந்தி யடிகள்பாற்சனற்குமார
னுண்ணிறையன்பினுய்ந்த வியாதனுக்குணர்த்தவந்தப்
புண்ணியமுனிவன்சூதற் கோதியபுராணமூவா
றெண்ணியவிவற்றுட்காந்தத் தீசசங்கிதையின்மாதோ.

அறைந்திடப்பட்டதாகுமாலவாய்ப்புகழ்மையந்தச்
சிறந்திடும்வடநூறன்னைத் தென்சொலாற்செய்தியென்றிங்
குறைந்திடும்பெரியோர்கூறக் கடைப்பிடித்துறுதியிந்தப்
பிறந்திடும்பிறப்பிலெய்தப் பெறுதுமென்றுள்ளந்தேறு.

திருநகர்தீர்த்தமூர்த்திச் சிறப்புமூன்றந்தமூர்த்தி
யருள்விளையாடலெட் டெட்டருச்சனைவினையொன்றாக
வரன்முறையறுபத்தெட்டா மற்றவைபடலமாக
விரிமுறைவிருத்தச்செய்யுள் வகைமையால்விளம்பலுற்றேன்.

*　　*　　*　　*　　*

அறுகாற்பீடத்துயர் மாலாழிகடைந்தமுதை
　　யரங்கேற்றுமாபோ
லறுகாற்பேடிசைபாடுங் கூடன்மான்மியத்தை
　　யருந்தமிழாற்பாடி
யறுகாற்பீடுயர்முடியார் சோக்கேசர்சன்னிதியி
　　லமரர்சூழு
மறுகாற்பீடத்திருந்து பரஞ்சோதிமுனிவ
　　னரங்கேற்றினனே.

பாயிரம் முற்றுப்பெற்றது.

*　　*　　*　　*　　*

End :

எத்தியருச்சனைசெய்து நினைவிலரிதாயன்பிலெளியவட்ட, மூர்த்தி யையங்கயற்கண்ணியன்பனை முப்போதும்போய்முடிதாழ்ந்தின்பம், பூத்தமனத்தினராகிக்கருவித் தேன்பொதிந்தசிறுபுட்போலந்த, மாத்தலனில்வசிட்டாதிமுனிவர் தபோவனஞ்செய்துவதிந்தார்மன்னோ.

ஆகப்படலம் 72-க்கு திருவிருத்தம் 3363.

திருவிளையாடற்புராணத்துக் காணப்படும் பாண்டியர்களின் அட்டவணை.

1.—குலசேகர பாண்டியன். இராஜதானி—மணவூர் (S. கல்யாண புரம்). அவன் மகன

2.—மலயத்துவச பாண்டியன். மனைவி—காஞ்சனமாலை. அவர் மகள்

3.—தடாதகை. கணவன்—சுந்தரபாண்டியன். அவன் மகன்

4—உக்கிரகுமாரபாண்டியன். மனைவி—காந்திமதி. இவன் சங்க மேற்படுத்தினவன். இவன்மகன்

5—வீரபாண்டியன். அவன்மகன்

6.—அபிஷேகபாண்டியன். அவன்மகன்

7.—விக்ரமபாண்டியன். அவன் மகன்

8.—இராஜசேகரபாண்டியன். இவன் காலத்தில் கரிகாற்பெருவளத்தான் சோழநாட்டில் அரசுபுரிந்து வந்தான. இராசசேகரன் மகன்

9—குலோத்துங்கபாண்டியன்

10—அனந்தகுணபாண்டியன். இப்பாண்டியனை முடிக்கச் சமணர் ஓர் வேள்வி யியற்றினர். அனந்தகுணன் மகன்

11.—குலபூடண பாண்டியன். இவன்காலத்தில் காடுவெட்டிசோழன் கச்சியில் அரசு புரிந்தனன். குலபூடணன்மகன

12.—இராசபுரந்தர பாண்டியன். இவன்தம்பி அரசசிங்கமென்போன் தன்தமையனாகிய இராசபுரந்தரனுக்கு நிச்சயித்திருந்த காடுவெட்டிசோழன் மகளைக் கச்சிக்குப்போய்த் தான் கலியாணஞ்செய்துகொண்டு, அச்சோழனுடைய துணையால் தன்தமையனை யெதிர்த்துக் கலகஞ் செய்தான. இராசபுரந்தரன் மகன்

13.—இராஜேசன். அவன் மகன்

14.—இராசகம்பீரன். அவன் மகன்

15—பாண்டியவங்கியதீப்பாண்டியன். அவன் மகன்

16.—புரந்தரசித்து பாண்டியன். அவன் மகன

17.—பாண்டியவங்கிய பதாக பாண்டியன். அவன் மகன்

18.—சுந்தரேச பாதசேகர பாண்டியன். மதுரைக்கோபுரஞ்செய்வித்தோன். இவன் காலத்தில் ஆயிரம்பரிக்கோர்சேவகன் என்னும் சோழன் பாண்டியன்மீது படையெடுத்துத் தோல்வியடைந்தான. சுந்தரேச பாதசேகரன் மகன்

19.—வரகுண பாண்டியன். இவன் காலத்து பாணபத்திரர் இருந்தனர். வரகுணன் மகன்

20.—இராசவிராச பாண்டியன். அவன் மகன்
21.—சுகுணபாண்டியன். அவன் மகன்
22.—சித்திரவிரத பாண்டியன். அவன் மகன்
23.—சித்திரபூடண பாண்டியன். அவன் மகன்
24.—சித்திரதுவச பாண்டியன். அவன் மகன்
25.—சித்திரவரும பாண்டியன். அவன் மகன்
26.—சித்திரசேன பாண்டியன். அவன் மகன்
27.—சித்திரவிக்ரம பாண்டியன். அவன் மகன்
28.—இராசமார்த்தாண்ட பாண்டியன். அவன் மகன்
29.—இராசசூடாமணி பாண்டியன். அவன் மகன்
30.—இராசசார்த்தூல பாண்டியன். அவன் மகன்
31.—துவிசராசகுலோத்தம பாண்டியன். அவன் மகன்
32.—ஆயோதனப்பிரபாண்டியன். அவன் மகன்
33.—இராச குஞ்சர பாண்டியன். அவன் மகன்
34.—இராசபயங்கர பாண்டியன். அவன் மகன்
35.—உக்கிரசேன பாண்டியன். அவன் மகன்
36.—சத்தருஞ்சய பாண்டியன். அவன் மகன்
37.—வீமத்தேர் மன்னன் (பீமரதபாண்டியன்). அவன் மகன்
38.—வீமபராக்கிரம பாண்டியன். அவன் மகன்
39.—பிரதாபமார்த்தாண்ட பாண்டியன். அவன் மகன்
40.—விக்கிரமகஞ்சுக பாண்டியன். அவன் மகன்
41.—சமரகோலாகல பாண்டியன். அவன் மகன்
42.—அதுலவிக்கிரம பாண்டியன். அவன் மகன்
43.—அதுலகீர்த்தி பாண்டியன். அவன் மகன்
44.—கீர்த்திபூடண பாண்டியன்

ஜலப்பிரளயமும் புநஸ் ஸ்ருஷ்டியும்

45.—வம்சசேகர பாண்டியன். இந்தப்பாண்டியன்காலத்தில் **விக்கிரமசோழன்** பாண்டிநாட்டின்மீது படையெடுத்துத் தோல்வியடைந்தான். வம்சசேகரன் மிலேச்சரையும் துருஷ்கரையும் தோற்கடித்தான். **கபிலர், பரணர்**முதலிய (மூன்றும) சங்கப்புலவர்களாகச் சரசுவதி அவதரித்தது இவன காலத்தில். வம்சசேகரன் மகன்

46.—வம்சசூடாமணி பாண்டியன். இவனுக்குச் **சண்பகமாறன்** என்றும் பெயர். **தர்மியும் நக்கீரரும்** இப்பாண்டியன் காலத்துச்சிறப்புற்றிருந்தார்கள்.

47.—பிரதாபசூரிய பாண்டியன். அவன் மகன்
48.—வம்சத்துவச பாண்டியன். அவன் மகன்
49.—ரிபுமர்த்தன பாண்டியன்

50.—சோழவம்சாந்தக பாண்டியன்
51.—சேரவம்சாந்தக பாண்டியன்
52.—பாண்டியவம்சேச பாண்டியன்
53.—வம்சசிரோமணி பாண்டியன்
54.—பாண்டியேசுர பாண்டியன்
55.—குலத்துவச பாண்டியன்
56.—வம்சவிபூஷண பாண்டியன்
57.—சோமசூடாமணி பாண்டியன்
58.—குலசூடாமணி பாண்டியன்
59.—இராசசூடாமணி பாண்டியன்
60.—பூபசூடாமணி பாண்டியன்
61.—குலேச பாண்டியன். இடைக்காடர் இவன் காலத்தவர். குலேச பாண்டியன் மகன்
62.—அரிமர்த்தன பாண்டியன். இவன் காலத்தில் வாதவூரடிகள் (மாணிக்கவாசகர்) சிறப்புற்றோங்கினர். அரிமர்த்தனன் மகன்
63.—சகன்னாத பாண்டியன். அவன் மகன்
64.—வீரவாகு பாண்டியன்.
65.—விக்ரமவாகு பாண்டியன்.
66.—பராக்ரமவாகு பாண்டியன்.
67.—சுரத பாண்டியன்.
68.—குங்கும பாண்டியன்.
69.—கர்ப்பூர பாண்டியன்.
70.—காருண்ய பாண்டியன்.
71.—புருஷோத்தம பாண்டியன்.
72.—சத்துருசாஸன பாண்டியன்.
73.—கூன்பாண்டியன். இவன் காலத்தில் திருஞானசம்பந்தரும் குலச்சிறையாரும் சிறப்பெய்தி யிருந்தனர்.

24. உபதேசகாண்டம்.

மாகயிலாயவத்தியாயம்.

Beginning :

உலகுபுகழ் கொண் டுவப்பமுருகவேள்
பலகதைப [illegible]ாரு டன்சொற்படுத்தவு
மிலகுநாற்பொரு ளெய்தவுமோர்மருப்
பலகின்மாமதத் தைங்கரற்போற்றுவாம்.

சூதனருள்புராணமீ ரொன்பதுநான் கிலக்கஞ்
 சோதிபுராணம்பத்து மூவிலக்கங்காந்த
மோரிலக்கஞ்சனற் குமாரன்சூதன் பிரம
 னுலகளந்தோன் சங்கரன் வெய்யோன்பெயர்ச்சங்
கிதையாமீதடையவைம்பத்தஞ் சானூர்மூன்றஞ்சையா
 றேகமிவையாயிர மாயிரமாஞ்சங்கரத்திற்
போதசிவரகசியமோரா பதின் மூவாயிரத்தேழ்
 பொருந்துகண்டத் துபதேசகாண்டவகைபுகல்வாம்.

எ - து. நைமிசாரணியத்து இருடிகளுக்குச் சூதமகாவிருடி அனுக்கிரகம்பண்ணின புராணம் 18; அவையாவன, சைவம், பவுடிகம், மார்க்கண்டம், லிங்கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம், இவை, 10-ம் சிவபுராணம். காருடம், நாரதம், விண்டு, பாகவதம், இவை 4-ம் விஷ்ணுபுராணம். பிரமம், பாத்மம், இவை 2-ம், பிரமபுராணம் ஆக்கேயம் - 1-ம் அக்கினிபுராணம். கைவத்தம்-1-ம் சூரியபுராணம். ஆகபுராணம். ஒன்றும், 4-லக்ஷம் கிரந்தம். இதில் சிவபுராணம் 10-ம் 3-லக்ஷம் கிரந்தம். இதில் கந்தபுராணம் 1-ம் லக்ஷம். இதில் சங்கரசங்கிதை 30,000, த்தில் அதிரகசியகாண்டம் 17,000. சிவரகசியகண்டம், 13,000, இந்தச்சிவரகசியகண்டம், 13,000 - மும் 7-காண்டமாகவிருக்கும். அதில் உற்பத்திகாண்டம், அசுரகாண்டம் மகேந்திரகாண்டம் உயுத்தகாண்டம் தேவகாண்டம், தெட்சகாண்டம். இதில் 6 காண்டமும் காஞ்சீபும் ஆயிரக்கால்மண்டபத்திலே எழுந்தருளியிருக்கும் ஆறுமுகசுவாமி உலகமுட்கொண்டுவப்ப "செந்தமிழ்க்கொருசீர்வரம்பாகிய" வென்று பாடச்சொல்லிக்கச்சியப்பருக்கு அனுக்கிரகம்பண்ண, அவர்6-காண்டமும், 10 500- பாடினார். பின்பு உறையூருக்கு மேற்கேவயலூரிலெழுந்தருளியிருக்கும் ஆறுமுகசுவாமி "உலகமுட்கொண்டுவபப முருகவேள்" என்று பாடச்சொல்ல ஞானவரோதயபண்டாரம் 7-ம் காண்டம் உபதேசகாண்டம் ஒன்றும் 2,600 ஆகப்பாட்டினார். சங்கரசங்கிதையில் சிவரகசியகாண்டம் 13,000 கிரந்தமும், 7-காண்டமாக தமிழ்ப்பண்ணினபாட்டு 13,221.

* * * * *

சங்குகுடவயிறுளைந்துதாளமீன்று தவழ்கழனிதிகழ் வயலூரத்னிலமர்ந்தைக், கெங்கணுலகும்புகழஉபதேசஞ் செய்தெளியேற்குமவ்வழியென்றிரங்கிச்சிர்த்தி, பொங்குதமிழ்பொழியினுபதேசகாண்டம் புகறியெனச் சிறிதருளும்புனிதன்செவ்வே, ளோங்காரன்பின்னவன்கந்தனனுமைகோன்மைந்தனமரர்பணிகுமரனடியகத்துள்ளவைப்பாம்.

* * * * *

பருதியெனவருசூத னுரைத்திக ந்தப்
பரவையருணமுகிலமுதம் பருகிதென்னூற்
றருவுனன்காண்டப் பனையுமானபடலமான
சாகையுலவையும் விருத்தத்தமையுமோசை
வருதுணரமுன வாமனருமிறுமோங்க
வளரொளியாம் பொருட்கனியைவழங்குஞ்சீர்த்தி
கருதரியகாஞ்சிவளர் கச்சியப்ப
க்கற்பகத்தாருவை யிறைஞ்சிக்கருத்துள்வைப்பாம்.

End :—

இனபமுற்றோரைம்புலன்களைவென்ற விணையிலாச்சூதமாமுனியை, யன்புடன்வணங்கியனுமதி பெற்றேயவன்றனேவிடைகொண்டுசென றே, பொன்புரைசடிலமாதவரெல்லாம் புகுந்துதற்பன்னசாலைகளில், நன்பரன்பொற்றாளுளத்தில்வைத்திருந்தேநாளும் வாழ்ந்துயர்கதிய டைந்தார்.

வாழ்கவேற்குமரனளினமென்மலர்த்தாள் வையகமுழுவதும்வாழ் க,வாழ்கமாமறையோர்மன்னவன் செங்கோல்வாழ்கமெய்த்தொண்டர் களெல்லாம், வாழ்கவெண்ணீறஞ்செழுத்துமெஞ்ஞான்றும்வாழ்கநற் கண்டிகைமாலை, வாழ்கவிங்ஙனஞ்சொலுபதேச காண்டமான்மியம்பு விவலம்வந்தே.

எண்பத்தைந்தாமத்தியாயமுற்றிற்று.

ஆக, சிவயோகமகிமையுள்படவிருத்தம் 126.

ஆக அத்தியாயம் எண்பத்தஞ்சுக்கு விருத்தம் 2,713.

உபதேசகாண்டம் முற்றும்.

---

25. கோயிற்புராணம்.

வியாக்கிரபாதச் சருக்கம்.

Beginning :

பொற்பதப்பொதுவிர் புலியூர்புகழ்
சொற்பதப்பொருளாகுவதூயவ
ரற்பகற்றொழுவாழணிகோபுரக்
கற்பகத்தனியானைக்கழல்களே.

* * * * *

திருஞானசம்பந்தர்செய்யதிருவடிபோற்றி
யருணாவுக்கரையபிரா னலர்கமலப்பதம்போற்றி
கருமானவெமையாளுங் கண்ணுதலோன்வலிந்தாண்ட
பெருமான்பூங்கழல்போற்றி பிறங்கியவன்பர்கள்போற்றி. (8)

பேசுபுகழ்வாதவூர்ப் பிறந்துபெருந்துறைக்கடலுண்
டாசிலெழில்தடித்தயர் வஞ்செழுத்தால்தீர்த்தெழுந்து
தேசமலிதரப்பொழிவார் சிவபோகமிகவிளைவான
வாசகமாமாணிக்க மழைபொழிமாமுகில்போற்றி. (9)
நாவிரவுமறையினராய் நாமிவரிலொருவனெனுந்
தேவர்கள்தேவன்செல்வச் செல்வர்களாய்த்திகழ்வேள்விப்
பாவுநெறிப்பலசெய்யும் பான்மையராய்மேன்மையராய்
மூவுலகுந்தொழு மூவாயிரமுனிவரடிபோற்றி. (10)
தந்தையெனுந்திகழ்ந்தபுகழ்த் தண்டீசர்விறல்தகுமெய்ச்
சிந்தையராயெல்லையிலாத் திருவேடத்தினராகி
யெந்தைபிரானருள்வளர்க்கு மியல்பினராய்முயல்தவங்க
ளந்தமிலாவடியவர்கள் திருக்கூட்டமவைபோற்றி. (11)
ஒன்றியசீரிரவி குலமுவந்தருளியுலகுய்யத்
துன்றுபுகழ்த்திருநீற்றுச்சோழனெனமுடிசூடி
மன்றினடந்தொழு தொல்லைவளர்கனகமயமாக்கி
வென்றிபுனையனபாயன் விளங்கியபூங்கழல்போற்றி, (12)

End :

சொற்றுணுமைபொருளாறுமென வொருதுணிவர்லவாருடொகு மாவிப், பொறாருமமைமலர்விளைசூழ்புனலணி புலியூர்வளர்நகர்புகழ் தாமங், கற்றருளைசெயல் பெற்றார்செவிசொடு கவர்வார்பொருவிரிப கர்வார்சீ, ருற்றரிருவினையற்றார்மிகுபரி யுடையார்திருவடியடை வாரோ. (49)

செடிசேர்பொழிலணிபுலியூர்வளநகர் செல்வம்பெருகுகதிருமன்றிற்
கொடிசேர்விடையின னடிசேரருளொளிகுறிகூடெசுகுழுமறைசூழ்க
படிசேர்வடிவின னடிசேர்முடியினர்புனல்சேரிருவிழியினராகி
அடிசேரெனதுயர்குடிகூடிடுநெறியாழ்வானடியவர்வாழ்வாரே. (50)

மழைவழங்குக மன்னவனோங்குக
பிழையில்பல்வள மெல்லாம்பிறங்குக
தழைகவஞ்செழுத் தோசைதனாயெலாம்
பழையவைதிக சைவம்பரவுவே. (51)

ஆகவிருத்தம் 412.

முற்றும்.

---

26. சிதம்பரபுராணம்.

Beginning :

குஞ்சரமுகத்துகோவே கொடுவினைதவிர்க்குந்தேவே
செஞ்சடைவேணியண்ணல் சிதம்பரபுராணந்தன்னை
வஞ்சனேன்வளாவதற்கு வன்பிழைபகற்றியென்றன்
நெஞ்சினிற்குடியாயுற்று நீ யெனைரட்சிப்பாயே.

மருத்தணிபதத்தாய்போற்றி வரைபகீவெறிந்தாய்போற்றி
தருத்தணிவானிலோர்கள் தமதிடர்தவிர்த்தாய்போற்றி
உருத்தணிபிறவிதீத் தாளுயர்பராபரமேபோற்றி
திருத்தணிகிரியாய்போற்றி சேந்தனேபோற்றிபோற்றி.

வானநாடரு மாதவநாடரு
மோனஞான முழுதுமுணர்ந்திடத்
தானமேவு தடவிகடாசல
வானைமாமுகத் தண்ணலையேத்துவாம்.

சிதம்பரச்சருக்கம்.

* * * * *

பருதிகுலந்தனிலுதித்துப்பரசமய விருளகற்றிப்பரமநாடும்
பொருவருபேரம்பலமுங் கோபுரமுமாலயமும்பொன்மேய்ந்துண்மைச்
சுருதியுடன்சைவநெறிதழைத்தோங்கத் திருநீற்றுச்சோழனென்னுங்
குருமணிமாமுடிபுனைந்த குலத்துங்கவளவனருள்குறித்துவாழ்வாம். ()

* * * * *

முற்றுமுணர்மெய்கண்டசந்ததிக் கோர்தீபமெனமுதன்மைகொண்ட, கொற்றவன்றன்குடிமருவுகுலவுமுமாபதிசிவன்பொறகோயிலுண்மை, சொற்றபுராணமுமிருக்கப்பின்னுமொருவகையானுஞ்சொல்வான்புக்கேன், மற்றவன்றன்றிருவடியின் வழிவந்தோற்கடியனெனும்வழக்கான்மன்றே. (13)

தேவாதிதேவனருள்நந்திபாற் சனற்குமரன்றெளிந்துவேத
மோவாதுவியாதற்குப்புகலவவன் சூதமுனிக்குரைததெய்வ
மூவாறுபுராணத்துட்சிதம்பரத்திற்பெருமைபலமுதன்மைத்தாகுந்
தாவாதபெருஞ்சைவபுராணத்தின்வந்துளதுசாற்றுமீதால். (14)

ஆற்றல்சான்ற மூவாயிரமறையவரானுக்
கேற்றதொண்டர்கள் மறைநெறியதிகராயுள்ளோர்
போற்றருஞ்சிதம்பரத் திடைப்புகழினைத்திகழச்
சாற்றுவாய்வடமொழி வழிதமிழினாலென்றார். (15)

களங்கமற்றபொற் பொதுவின்முன்காதலாலோங்க
வளந்திகழ்ந்தபேரறிஞர் நூலமாசொழிதகன்பா
லுளம்பரிந்திடச்சருக்கமுமொன்பதாய்வகுத்து
விளங்குமாறுரைசெய்தனன் விருத்தயாப்பதனால்.

End :

மாறுநீங்கி மாணுக்கரின்மையிற்
கூறிநேமிலைக் கோதையோர்பாகனுக்
கேறுமன்பினிற நீ விருத்தனைத்
தேறுமின்னெனச் செப்புதல்மேயினான். (16)

தாவிலாமறைச் சைவந்தழைத்திடக்
காவல்வேந்தடன் காசினிவாழ்ந்திடத்
தேவர்தேவன திருவுருவாகிய
மூவர்பாட விம்மூவுலகோங்கவே. (17)
இந்தவெல்லை மலைநாட்டிடத்தினும்
வந்ததெய்வ வடமொழியிற்படி
செந்தமிழ்த்தொடை யாப்பாற்றெரித்தன
முந்துமற்றது வந்தால்மொழிதுமால். (18)
மன்னனோங்குக மாமறையோங்குக
யன்னமூர்தியருங் குலமோங்குக
செந்நெலோங்குக செல்வமுமோங்குக
அன்னையம்பலத் தையனுமோங்குக. (19)

தற்றெரிசனச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம் 9-க்கு திருச்செய்யுள் 813.

சிதம்பரபுராணம் முற்றும்.

---

27. பிரமோத்தரகாண்டம்.

Beginning:

நல்லசொற்பொரு ளுநடாத்தவும்
எல்லைகாணரும் பேரின்பமெய்தவும்
வெல்லுமானை முகத்தினைமேவிவாழ்
வல்லபைக்குரியானை வழுத்துவாம்.
பூமேவுசதுமுகனுந் திருமாலும்போற்றிசெய்யத்
தேமேவுகுழலுமையாள் செழுங்குவளைவிழிகளிப்ப
மர்மேவுமிதழிநறு மழைதுளிப்பமணிமன்றந்
தாமேவிநடம்புரியுந் தனிப்பொருளைவணங்குவோம். (1)

* * * * *

தேசானசிவஞானச் செழுஞ்சுடரான்மும்மலமா
மாசானவிருளகற்றி மன்னுயிரைப்புரந்தளித்துத்
தூசானையுரியசைத்தோன் ஞெல்சமயநிறுத்தநிம்மை
யீசானமாமுனிவ னிணையடியையிறைஞ்சுவாம். (9)
கறங்குதிரைப்பெருங்கடல்சூழ்ந்தவனிபுரந்திகல்கடிந்துகலியைமாற்றி
மறந்திகழ்பவிலங்கிலைவேல் வரதுங்கராமனியன்மதுரைச்சங்கஞ்
சிறந்தவறுகாற்பீடந்தனிப்பிரமோத் தரகாண்டந் தேன்சோலாக்கி
அறைந்தமைக்குங் கவிஞர்செவிக் காரமுதமாகவரங்கேற்றினனே. (13)

End :

தேவர்தம்பெருமான் சிறந்தவஞ்செழுத்தின் சீர்புகழ்மாக்கதைமு தலாப், பாவநின்றகற்றும் புராண நூல்கேட்போர் பலன்பெறன்மொ ழிகதையிரு, மேவரப்புகன்ற சிவகதைமுழுதும் விழைவுடன்கேட்கு நரவர்தாம், யாவர்மற்றேனுமாலயன்முதலோரெய்தருஞ் சிவபதம டைவார். (108)

ஞாலமோங்குக நான்மறைநீடுக
சீலமன்னவர் செங்கோல்விளங்குக
காலமாமழை மன்னுககாதலாற்
சாலவீச னடியார்தழைகவே. (109)

இருபத்திரண்டாவது வஞ்சுளைமுத்திபெற்ற
அத்தியாயம் முற்றிற்று.

ஆக, திருவிருத்தம் (1323).

பிரமோத்தரகாண்டம் முற்றிற்று.

29. தாயுமானசுவாமிகள் பாடல்.

Beginning ;

அங்கிங்கெனுதபடி யெங்கும்ப்ரகாசமா
யானந்தபூர்த்தியாகி
யருளொடுநிறைந்ததெது தன்னருள்வெளிக்குளே
யகிலாண்டகோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமனின்றதெது சமயகோடிகளெலாந்
தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர் வழக்கிடவுநின்றதெது
வெங்கணும்பெருவழக்கா
யாதினும்வல்லவொருசித்தாகியின்பமா
யென்றைக்குமுள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்ற வெல்லையுளதெதுவது
கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலாமோன வுருவெளியதாகவுங்
கருதியஞ்சலிசெய்குவாம். (1)

ஊரனந்தம்பெற்ற பேரனந்தஞ்சுற்று
முறவனந்தம்வினையினு
லுடலனந்தஞ்செயும் வினையனந்தங்கருத்
தோவனந்தம்பெற்றபேர்

சீரனந்தஞ்சொர்க்க நரகமுமனந்தநற்
றெய்வமுமனந்தபேதந்
திகழ்கின்றசமயமு மனந்தமதனுன்ஞான
சிற்சத்தியாலுணர்ந்து
காரனந்தங்கோடி வருஷித்ததெனவன்பர்
கண்ணும்விண்ணுந்தேக்கவே
கருதரியவானந்த மழைபொழியுமுகிலைநங்
கடவுளைத்துரியவடிவைப்
பேரனந்தம்பேசி மறையனந்தஞ்சொலும்
பெரியமௌனத்தின்வைப்பைப்
பேசருமனந்தபத ஞானவானந்தமாம்
பெரியபொருளைப்பணிகுவாம். (2)

அத்துவிதவத்துவைச் சொப்ப்ரகாசத்தனியை
யருமறைகண் முரசறையவே
யறிவினுக்கறிவாகி யானந்தமயமான
வாரியையனுதியேக
தத்துவசொரூபத்தை மதசம்மதம்பெருச்
சாலம்பரகிதமான
சாசுவதபுட்கல நிராலம்பவாலம்ப
சாந்தபதவ்யோமநிலையை
நித்தநிர்மலசகித நிஷ்ப்ரபஞ்சப்பொருளை
நிர்விஷயசுத்தமான
நிர்விகாரத்தைத் தடத்தமாய்நின்றொளிர்
நிரஞ்சனநிராமயத்தைச்
சித்தமறியாதபடி சித்தத்தினின்றிலகு
திவ்யதேசோமயத்தைச்
சிற்பரவெளிக்குள்வளர் தற்பரமதானபர
தேவதையையஞ்சலிசெய்வாம். (3)

* * * * *

End:

அருவென்பனவுமன்றி யுருவென்பனவுமன்றி
யகமும்புறமுமன்றி முறைபிறழாது
குறியுங்குணமுமன்றி நிறைவுங்குறைவுமன்றி
மறையொன்றெனவிளம்ப விமலமதாகி
அசலம்பெறவுயர்ந்து விபுலம்பெறவளர்ந்து
சபலம்சபலமென்று ளறிவினர்காண
ஞானவெளியிடை மேவுமுயிராய

அனலொன்றிடவெரிந்து புகைமண்டிடுவதன்று
புனலொன்றிடவமிழ்ந்து மடிவிலதூதை
சருவும்பொழுதுயர்ந்து சலனம்படுவதன்று
சமர்கொண்டழிவதொன்றொ ரியல்பினதாகும்
அவனென்பதுவுமன்றி யவளென்பதுவுமன்றி
யதுவென்பதுவுமன்றி யெழில்கொடுலாவு
மாருநிலையறியாதபடியே

இருளென்பதுவுமன்றி யொளியென்பதுவுமன்றி
யெவையுந்தனுளடங்க வொருமுதலாகு
முளதென்பதுவுமன்றி யிலதென்பதுவுமன்றி
யுலகந்தொழவிருந்த வயன்முதலோர்கள்
எவருங்கவலைகொண்டு சமயங்களில்விழுந்து
சுழலும்பொழுதிரங்கி யருள்செயுமாறு
கூறரியசகமாயையறவே

எனதென்பதையிகழ்ந்த வறிவின்றிரளினின்று
மறிவொன்றெனவிளங்கு முபயமதாக
வறியுந்தரமுமன்று பிறியுந்தரமுமன்று
வசரஞ்சரமிரண்டி னொருபடியாகி
எதுசந்ததநிறைந்த தெதுசிந்தனையிறந்த
தெதுமங்களசுபங்கொள் சுகவடிவாகும்
யாதுபரமதை நாடியறிநீ

பருவங்குலவுகின்ற மடமங்கையர்தொடங்கு
கபடந்தனில்விழுந்து கெடுநினைவாகி
வலையின்புடைமறிந்த மறியென்றவசமுண்டு
வசனந்திரமுமின்றி யவரிதழூறல்
பருகுந்தொழிலிணங்கி யிரவும்பகலுமின்சொல்
பகரும்படிதுணிந்து குழலழகாக
மாலைவகைபல சூடியுடனே

பதுமந்தனையிசைந்த முலையென்றதையுகந்து
வரிவண்டெனவுழன்று கலிலெனவாடுஞ்
சிறுகிண்கிணிசிலம்பு புனைதண்டைகண்முழங்கு
மொலிநன்றெனமகிழ்ந்து செவிகொளநாசி
பசுமஞ்சளின்வியந்த மணமுந்திடமுகந்து
பவமிஞ்சிடவிறைஞ்சி வரிசையினூடு
காலின்மிசைமுடி சூடிமயலாய்

மருளுந்தெருளும்வந்து கதியென்பதைமறந்து
மதனன்சலதிபொங்க விரணமதான

வளிபுண்டனை வளைந்து விரல்கொண்டுறவளைந்து
சுரதஞ்சுகமிதென்று பரவசமாகி
மருவுந்தொழின்மிகுந்து தினமுந்தினமும்விஞ்சி
வளரும்பிறைகுறைந்த படிமதிசோர
வானரமதென மேனிதிரையாய்
வயதும்படவெழுந்து பிணியுந்திமிதிமென்று
வரவுஞ்செயலழிந்து ளிருமலுமாகி
யனமுஞ்செலுதலின்றி விழியுஞ்சுடர்களின்று
முகமுங்களைகளின்று சரியெனநாடி
மனையின்புறவிருந்த வினமுங்குலைகுலைந்து
கலகஞ்செயவிருண்ட யமன்வரும்வேளை
யேதுதுணைபழிகாரமனமே.

தாயுமானசுவாமிகள்பாடல் முற்றுப்பெற்றது.

---

30. திருவாசகம்.

திருச்சிற்றம்பலம்.

Beginning:

நமச்சிவாயவாஅழ்க நாதன்றாள்வாழ்க
விமைப்பொழுதுமென்னெஞ்சினீங்காதான்றாள்வாழ்க
கோகழியாண்ட குருமணிதன்றாள்வாழ்க
வாகமமாகிநின் றண்ணிப்பான்றாள்வாழ்க
வேகனநேக னிறைவனடிவாழ்க
வேகங்கெடுத்தாண்ட வேந்தனடிவெல்க
பிறப்பறுக்கும்பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள்வெல்க
புறத்தார்க்குச்சேயோன்றன் பூங்கழல்கள்வெல்க
கரங்குவிவாருண் மகிழுங் கோன்கழல்கள்வெல்க
சிரங்குவிவாரோங்குவிக்குஞ் சீரோன்கழல்வெல்க
வீசனடிபோற்றி யெந்தையடிபோற்றி
தேசனடிபோற்றி சிவன்சேவடிபோற்றி
நேயத்தேநின்ற நிமலனடிபோற்றி
மாயப்பிறப்பறுக்கு மன்னனடிபோற்றி
சீரார்பெருந்துறைநந் தேவனடிபோற்றி
யாராதவின்ப மருளுமலைபோற்றி
சிவனவனென்சிந்தையு ணின்றவதனா
லவனருளாலே யவன்றாள்வணங்கிச்
சிந்தைமகிழச் சிவபுராணந்தன்னை

முந்தை வினைமுழுது மோயவுரைப்பனியான்
கண்ணுதலான்றன்கருணைக் கண்காட்டவந்தெய்தி
யெண்ணுதற்கெட்டா வெழிலார்கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்விளங்கொளியா
யெண்ணிறந்தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லாவினையேன் புகழுமாறொன்றறியேன்
புல்லாகிப்பூடாய்ப் புழுவாய்மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப்பாம்பாகிக்
கல்லாய்மனிதராய்ப் பேயாய்க்கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த்தேவராய்ச்
செல்லாஅநின்றவித் தாவரசங்கமத்து
ளெல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேனெம்பெருமான்.

* * *

அச்சோப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்.

End :

முத்திநெறியறியாத மூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப் பழவினைகள்பாறும்வண்ணஞ்
சித்தமலமறுவித்துச் சிவமாக்கியெனையாண்ட
வத்தனெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே. (1)

நெறியல்லாநெறிதன்னை நெறியாகநினைவேனைச்
சிறுநெறிகள்சேராமே திருவருளேசேரும்வண்ணங்
குறியொன்றுமில்லாத கூத்தன்றன்கூத்தையெனக்
கறியும்வண்ணமருளியவா றார்பெறுவாரச்சோவே. (2)

பொய்யெல்லாமெய்யென்று புணர்முலையார்போகத்தே
மையலுறக்கடவேனை மாளாமேகாத்தருளித்
தையலிடங்கொண்டபிரான் றன்கழலேசேரும்வண்ண
மையனெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே. (3)

மண்ணதனிற்பிறந்தெய்த்து மாண்டுவிழக்கடவேனை
யெண்ணமிலாவன்பருளி யெனையாண்டிட்டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீறணிவித்துத் தூய்நெறியேசேரும்வண்ண
மண்ணலெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே. (4)

பஞ்சாயவடிமடவார் கடைக்கண்ணாலிடர்ப்பட்டு
நெஞ்சாயதுயர்கூர நிற்பேனுன்னருள்பெற்றே
னுய்ஞ்சேனுனுடையானே யடியேனைவருகவென்
றஞ்சேலென்றருளியவா றார்பெறுவாரச்சோவே. (5)

வெந்துவிழுமுடற்பிறவி மெய்யென்றுவினைப்பெருக்கிக்
கொந்துகுழற்கோல்வளையார் குவிமுலைமேல்வீழ்வேனைப்
பந்தமறுத்தெனையாண்டு பரிசறவென்றுரிசுமறுத்
தந்தமெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே. (6)

தையலார்மையலிலே தாழ்ந்துவிழக்கடவேனைப்
பையவேகொடுபோந்து பாசமெனுந்தாழுருவி
யுய்புநெறிகாட்டுவித்திட் டோங்காரத்துட்பொருளை
யையனெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே. (7)

சாதல்பிறப்பென்னுந் தடஞ்சுழியிற்றடுமாறிக்
காதலின்மிக்கணியிழையார் கலவியிலேவிழுவேனை
மாதொருகூறுடையபிரான் றன்கழலேசேரும்வண்ண
மாதியெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே. (8)

செம்மைநலமறியாத சிதடரொடுந்திரிவேனை
மும்மைமலமறுவித்து முதலாயமுதல்வன்று
னம்மையுமோர்பொருளாக்கி நாய்சிவிகையேற்றுவித்த
வம்மையெனக்கருளியவா றார்பெறுவாச்சோவே. (9)

திருச்சிற்றம்பலம்.

திருவாசகம் முற்றியது.

திருச்சிற்றம்பலம்.

---

31. திருவாய்மொழி.

Beginning :

தனியன்கள்.

திருவழுதிநாடென்றுந் தென்குருகூரென்று
மருவினிய வண்பொருநலென்று—மருமறைக
ளந்தாதிசெய்தா னடியிணையேயெப்பொழுதுஞ்
சிந்தைசெயாய் நெஞ்சேதெளிந்து.

மனத்தாலும்வாயாலும் வண்குருகூர்பேணு
மினத்தாரையல்லா திறைஞ்சேன்—தனத்தாலு
மேதுங்குறைவிலேனெந்தைசடகோபன்
பாதங்களியாமுடையபற்று.

ஏய்ந்தபெருங்கீர்த்தி யிராமானுசமுனிதன்
வாய்ந்தமலர்ப்பாதம் வணங்குகின்றேன்—ஆய்ந்தபெருஞ்
சீரார்சடகோபன் செந்தமிழ்வேதந்தரிக்கும்
பேராதவுள்ளம்பெற.

வான்றிகழுஞ்சோலை மதிலரங்கர்வண்புகழ்மே
லான்றதமிழ் மறைகளாயிரமு—மீன்ற
முதற்றாய்சடகோபன் மொய்ம்பால்வளர்த்த
விதத்தாயிராமானுசன்.

மிக்கவிறைநிலையு மெய்யாமுயிர்நிலையுந்
தக்கநெறியுந் தடையாகித்—தொக்கியலு
மூழ்வினையும்வாழ்வினையு மோதுங்குருகையர்கோன்
யாழினிசை வேதத்தியல்.

முதல் திருவாய்மொழி.

உயர்வறவுயர்நலமுடையவனெவனவன்
மயர்வறமதிநல மருளினனெவனவ
னயர்வறுமமரர்க ளதிபதியெவனவன்
துயரறுசுடரடி தொழுதெழன்மனனே.

மனனகமலமற மலர்மிசையெழுதரு
மனனுணர்வளவிலன் பொறியுணர்வவையில
னினனுணர்முழுநல மெதிர்நிகழ்கழிவினு
மினனிலனென்னுயிர் மிகுநரையிலனே.

இலனதுவுடையனிதெனநினைவரியவ
னிலனிடைவிசும்பிடை யுருவினனருவினன்
புலனொடுபுலனல னொழிவிலன்பரந்தவந்
நலனுடையொருவனை நணுகினநாமே.

நாமவனிவனுவ னவளிவளுவளெவள்
தாமவரிவருவ ரதுவிதுவுதுவெது
வீமவையிவையுவை யவைநலதீங்கவை
யாமவையாயவை யாய்நின்றவவரே.

அவரவர்தமதம தறிவறிவகைவகை
யவரவரிறையவ ரெனவடியடைவர்க
ளவரவரிறையவர் குறைவிலரிறையவ
ரவரவர்விதிவழி யடையநின்றனரே.

நின்றனரிருந்தனர் கிடந்தனர்திரிந்தனர்
நின்றிலரிருந்திலர் கிடந்திலர்திரிந்தில
ரென்றுமோ ரியல்பினரெனநினைவரியவ
ரென்றுமோரியல்பொடு நின்றவெந்திடரே.

திடர்விசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை
படர்பொருள்முழுவது மாயவையவைதொறு
முடன்மிசையுயிரெனக்கரந் தெங்கும்பரந்துளன்
சுடர்மிகு சுருதியுளிவையுண்டசுரனே.

சுராறிவநிலை விண்முதல்முழுவதும்
வரன்முதலாயவை முழுதுண்டபரம்பரன்
புரமொருமூன்றெரித் தமரர்க்குமறிவியந்
தரனயனெனவுல கழித்தமைத்துளனே.

உளனெனிலுளனவ னுருவமிவ்வுருவுக
ளுளனலனெனிலவனருவமிவ்வருவுக
ளுளனெனவிலனெனவிவைகுணமுடைமையி
லுளனிருதகைமையொ டொழிவிலன்பரந்தே.

பரந்ததண்பரவையு ணீர்தொறும்பரந்துளன்
டரந்தவண்டமிதென நிலவிசும்பொழிவறக்
கரந்தசிவிட ந்தொறுமிடந்திகழ்பொருடொறுங்
கரந்தெங்கும்பரந்துள னிவையுண்டகரனே.

கரவிசும்பெரிவளி நீர் நிலமிவைமிசை
வரனவில்திறல்வலியளிபொறையாய்நின்ற
பரனடிமேற்குருகூர்ச் சடகோபன்சொல்
நிரனிறையாயிரத் திவைபத்தும்வீடே.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

நாற்சீரானவடிநாலுமொத்திருக்கையாலே கலிவிருத்தம்.

வீடுமின்முற்றவும், வீடுசெய்தும்முயிர்,
வீடுடையானிடை, வீடிசைமின்னே.

*   *   *   *   *

சேர்த்தடத்தென்குருகூர்ச்சடகோபன்சொற்,
சீர்த்தொடையாயிரத், தோர்த்தவிப்பத்தே.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

பா வஞ்சித்துறை, பண் முதிர்ந்தகுறிஞ்சி. தாளம் ஏழொத்து.

End:

அவாவறச்சூழரியையயனையரனையலற்றி
யவாவற்றுவீடுபெற்றகுருகூர்ச் சடகோபன்சொன்ன
வவாவிலந்தாதிகளா யிவையாயிரமுமுடிந்த
வவாவிலந்தாதியிப்பத்தறிந்தார்பிறந்தாருயர்ந்தே.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

பா கலித்துறை, பண் பஞ்சமம், தாளம் ஏழொத்து.

திருவாய்மொழி முற்றும்.

பிங்களஸு கார்த்திகை 24உ புதவாரமும் திரிதிகையும் புனர்பூசமும் கூடின சுபதினத்திலே காஞ்சிபுரத்தில் திருவாய்மொழி எழுதிநிறைவேறிற்று.

முப்பாழும்பாழென் றறைந்தார்திருமூல
ரப்பாலும்பாழென் றறைந்தார்சடகோபர்.

31a. தாண்டவமாலை மூலமும் உரையும்.

Beginning :

வேதப்பொருளை விளங்குபரமேட்டியினுக்
காதரவாமந்தப்புரபொருளைத் தீதகற்றுஞ்
சோணையுடன்வீணையுடைச் சுந்தரனையான்றொழுவன்
காணமன்த்தாற் கனிந்து.

இது கடவுள்வாழ்த்து.

இந்நூல்செய்தோர்யாவரோவெனின், "செய்யதாமரைமிசை, வெய்ய தீவினைகெடப், பையவந்தவனடி, மெய்யதாம்வாழ்த்திடு, மையமில் கேள்வியப்பா, வையனென்போன்," எனக்கொள்க.

இந்நூலெந்நூலின்வழித்தேனின், "மாவிந்தைசோதரன்மலரடிவணங்கும், கோவிந்ததீட்சிதீயத் தின்வழித்து" எனக்கொள்க.

இந்நூலேத்துணைச் செய்யுளாற்கூறியதேனின், "எள்ளவில்," வள்ளை முப்பானுறுடன் தள்ளுதலில்லா முப்பானிரண்டெனக்கோள்க.

இந்நூற்குப்பெயர்யாதோவெனின், "திருமலிநெல்லித்தப்பமென்பதிதனில், மருவிய ஆண்டிமகிபதிதவத்தில், திருந்தியகற்பிற்சிறந்தினிது விளங்கு, மருந்ததியன்ன வவன்மனைவயிற்றி, லுதயகதிரவனென்னவுதித்துத், திதிப்பெறுமூலகிற் றிசையோரெட்டினு, மூலவும்புகழானுலந்தோளண்ண, விலகுஞ்சங்கமொடெழில்பெறும்பதும, நிதிகளுக்கிறை வனிதியிற்குன்றுன், மதியெனச்சிறந்தமலர்முகமுடைய, னாருணி நீரெனவுயர்பெருஞ்செல்வன், வாரணிமுலையார் மயல்கொளுமதனன், பம்பைக்கிறைவன்பாவலர்தாரு, கம்பன்கழலிணைகருதித்துதிப்போன், கருடக்கொடியோன் கரியிடைமதித்தோன், தருமத்தலைவன் தருகுமரா ந்தையான், வேண்டார்வணக்கிவிருதுபெறும் வணிக, னுண்டகை தாண்டவபூபனநம்போரு, ளன்புடனளித்திவ் வவனியிலென்பெய, ரென்றுநின்றலவ வென்றுரைத்திட்டுச், செய்வித்ததனாற் றண்டவமாலை," என்னும்பெயர்த்து.

யாப்பியாதோவெனின், "வடமொழிப்பொருளை வகுத்துத்தென் மொழி, படவுரைத்ததனாற்பண்புறுமொழிபெயர்ப்பு" எனக்கொள்க.

இந்நாலுணுதலியபொருள்யாதோவெனின், "பாரில்வகைமூன்ருய் பரிக்குஞ்சோதிட, நூல்நடுவணது நுதலியபொருள்" எனக்கொள்க.

இந்நூலாராய்ந்தார்யாவரெனின், "பூமிசைநடந்தவாமனிணையடி, மாமனத்திருத்துநேமிநாத, ரென்னுமாசிரியராராய்ந்தார்" எனவுணர்க.

இந்நூலாற்பயன்யாதோவெனின், "கடல்புடைசூழுங் காசினியவர் தம், முடலுறுமின்பதுன்பமனைத்தும், நுண்ணிதினுணர்ந்து நுவல் வோர்நுவல, மன்னுறுமனிதர்மாண்புடன்விரும்பிச், சொர்ணமுந்தூ சும்சொம்புடனளித்துத், தந்நயமுணர்ந்துதாரணியதனிற், செய்வது செய்துசெய்யாததுதவிர்வது" எனக்கொள்க.

பாயிரமுண்டானதெல்லாமெழுதப்பெருகு மாதலான்வேண்டியம ட்டிலெழுதியதெனவுணர்க.

ஓரைமுதலாக வுரைக்குமவையாவு
மோரையிரத முதலோர்ந்துணர்ந்து—பாரிலிந்தத்
தாண்டவமாலைப் படியேத்க்கவிசேடபல
ஞண்டருள்வீரா ரறிவினீர்.

(இதன்பொழிப்பு) நிறைந்தவறிவினையுடைய புலவர்காள்! பூமியிட த்து லக்கினமுதலாகச்சொல்லப்பட்ட சகலமும் ஓராசாரமுதலான நூல்களிலாராய்ந்து அறிந்து தாண்டவமாலையென்னு மிந்நூற்படியே தக்கதாய்விசேடமாயிருக்கும் பலாபலன்களையாண்டுகூறுங்கோளென் றவாறு.

End ;

கோவிந்ததீட்சிதர் தங்கோள்கையினுற்கூறுகின்ற
மாவிந்தநூலின் வழக்கறிந்து—தேவிந்
திரர்போற்றும்பிண்டியஞ் செல்வன்சீர்கூறி
வருவனப்பாவை யன்வந்து. (69)

ஆதியாஞ்செய்யுளோ ராருறுமாறைந்தின்
மீதிரண்டதனல் மேதினியி—லோதிஞ
ஞண்டகையனுண்டி மகிபனருள்வணிகன்
தாண்டவன்றன்பேரைத் தரித்து. (70)

ரத்தாட்சி௵ ஆவணி௴ 11௳ தாண்டவமாலையுரை

எழுதிமுடிந்தது முற்றும்.

31b. சாதகாலங்காரம்.

Beginning :

நீருலவுபுவியில் நரர்சனனகாலேவிண்ணில்,
நின்றநவக்கிரகத்தால் நிகழ்த்துபலன்புகலு
மேருலவுவடமொழியை சீசதமிழ்ச்சாதகநூ
லெனத்தமியேனுரைசெய்ய வெழில்வேதமுனிவன்
பாருலகிற் குருகுலப்பாரத கதையைவழுத்தப்
பயிலும்வடகிரிமிசையிற் பரிந்துகுவடதனுற்
சீருலவவரைந்தருளுந் தெய்வவாரணத்தின்
செழுங்கமலத்தாளிணையைச்சிரத்தினில்வைத்திடுவாம்.(1)

வைத்தபலபூதபேதங்க ளெழுவகையின்
மன்னுமுயிர்க்குயிராகி மணியொளியினிலங்கும்
பைத்தலேவாளரவரசன் வியாக்கிரமாமுனியும்
பணியநடம்புரி பரமர்பங்கயத்தாள்தொழுதே
கைத்திகிரிநெடுமால் தந்தருள் விரிஞ்சன்மகவான்
கருணையுறவணங்கு சிவகாமசௌந்தரிசொல்
சத்திகணபதியமரர்புரி சிறைமீட்டருளுஞ்
சண்முகவேலாயுதன்பொற்சரணமலர்தொழுவாம். (2)

உம்பர்தொழுங் கனகசபாபதிநாதர்தாமும்
ஒன்றென்னுந் தில்லைமூவாயிரத்திலொருவன்
அம்புயவாவிகள்புடைசூழ் கஞ்சனூரதிபன்
னருள்சுரந்துபொழி கருணையாண்டகோவையன்
நம்பினமெய்யடியார்கள் பஞ்சமலமகற்றி
ஞாதுருஞானம்ஞேயம் நாட்டமுறவருளிச்
செம்பதுமத்தாளுதவும் பானதருமபுரத்தில்
திருஞானசம்பந்தன் திருவடியுந்தொழுவாம். (3)

வாமமுதற்பற்பலசமயவகை நூலாகமங்கள்
மன்னுசிவசமய சாவதுதிரவண்மைபலவுந்
தாமுமிகவுணர்ந்தடியார் பரிபாகமறிந்து
தயவுடனேதிருநோக்காற் சஞ்சிதங்களகற்றி
ஓமவிதிப்படி சமயபோதமுதலுரைத்து
மோரெழுத்திலஞ்செழுத்தி னுண்மையுமெய்யுயிரும்
பூமடியுஞ்சேவடியுங்காட்டி யருள்வழங்கும்
புகழ்ஞானப்பிரகாசன் பொன்னடியைப்பணிவாம். (4)

ஆதவன்புங்கவன் வேதவியாசர்பராசரரு
மத்திரிரோமசர் வதிஷ்டரணிமரீசிமுனிவர்

போதபவுசலர்யவனர் சவனர் மனுபிருகு
புகழ் சகுனரங்கிரர்காசிபர்கார்க்கியரு
மோதினுர்தாமுதலி லொன்பதின்மர்கூடி
யுரைசெய்தநாலிலக்கத்தைப்பதினுயிரமாம்
நீதிபெறுசோதிடத்திற் றெரிந்தெடுத்தவுண்மை
நிறைந்தபொருள்தனைக்கருத்தில் நினைந்துவுரைத்ததுவே.

தான்செய்ததவசில்லோ கொதகோத்திரத்தன்
தமிழ்வதிட்டைகுடிமேவு சாமசதெதிர்மாம்
மாண்பான திருமலையங்கார்துணைவைமேவு
மறைமுனியாராவமுதினவாமெனும் நாரணையன்
தேனுலவும்பொழிவெதிரிவினப்பிரமானந்தன்
திருவருள்பெற்றிடுஞ் சிதானந்தசிவயோகி
ஞானபானதருவே தன்கீழ்மூத்தூர்மேவும்
நாரணையனிவர் மூவர்நவின்றவடமொழியும். (6)

மொழிசுருதியாகம சாத்திரங்கள் சோதிடத்தின்
முறைகெணித்துலபாக முழுதுங்காவியமு
மொழியாதசமைய சாத்திரதர்க்கவிதியு
மூன்றுமத்தியார்ச்சுன வேதியனுமுரைத்தருளும்
பழியாதலம்பாக சாதகதீபிகையும்
பயிலருட்டம் நவநீதம்பகாருதராசிகமு
மழியாதவட்டவயிசுரிய விதிப்படியோ
டலங்காரசாதகத்தினடைவு மோராய்ந்தே. (7)

ஓராசாராஞ்சாராவளி பாராசரிய
முயருஞ்சந்தான தீவிகைபிறர்சாதகமுஞ்
சீராருரு சருறைசற்வதறம் பெறுசிந்தாமணியுஞ்
செப்பியகொளஞ்செம்பு நாத்தமுதற்றெரிந்தே
போராரும்பாவங்கடோறும் பலனைப்பிரித்து
பிறைகதிர்செவ்வாயாந்தி பிருகுசனியான
கூராகும்வாளெயிற்றோர் முதலோரைத்தொழுதே
கூறுகின்றே னவரருளுட்கொண்டுதானே. (8)

கொண்டுதமிழ்சாதகத்தி னலங்காரமெனப்பேர்
குறித்தட்டஞ் சுபமராசயோகமங்கிகையு
மண்டியநட்பாட்சியுச்சம்பகை நீச்சம்பலன்கள்
மருவுதிரைக்காண மூலத்திரிகோணங்
கண்டிமெவெளிசகுனங்களோரைமகாதிசையுங்
காலசக்கரமுதலங்கிகை சயிலசக்கரமு
மிண்டியலக்கினமுதலாயப் பன்னிருபாவத்தில்
வினித்தபலனிவை தெரிந்துவிளம்பலுற்றுமோ. (9)

உற்றதொகை நாலுலக்கந்தன்பதினாயிரமேன்
றுரைத்தவடமொழி வெற்பினொருகடுகினளவும்
பெற்றிடுமங்கிசை நூறில்வொருபங்கைப்
பேருலகிற் சாதகநூலெனப்பெயரும் நினைத்து
வெற்றிசெறிசெந்தமிழை யுணர்ந்தருளும்பெரியோர்
வீற்றிருக்குஞ்சபைதனில்யான் விளம்பியபுன்தமிழின்
குற்றமுரையார்கருணை புரிவரறியாத
குதலைமொழியேழையென்சொற்குறித்ததெனவென்றே.()
குறித்திடுசாதகமென்ப தென்றவாதன்வினையின்
குணங்களறிந்தயன் விதித்தகொள்கையுளதன்றோ
மறித்துமவர்தமக்கு வரும் பலபாவத்தின்
வகையறிந்துபெரியோர்கள் வழுத்தியசொல்லதனைப்
பிறித்தறிந்து சுபம்வருமொறுளமகிழ்ச்சி
பொங்கப்பின்னசுபம்வருமிதற்குப் பிரதியென்கொலென்று
நெறிதரும்சாத்திரத்தின் விதிசாந்திசெய்தே
நிறைந்தசுகம்பெறுவதற்கே நிகழ்த்தியசாதகமே. (11)

End:

உரைப்போன்மதுர நல்வசனமுயர்ந்ததறக்கத்ததிபதியாப்
புரப்புநிறைந்தவெகுபூமி பதியிற்கரசாய்ப்பேரிகையு
மிரைக்குமல்லரிவாத்தியமு மினியதனமுந்திறிலெனவென
னுரைக்குமுன்னேயாறுறில் நல்கும்வருடமெட்டாமே. (101).
ஆமேதேளுமிலக்கணமா யரசன்சுங்கனிருவருறத்
தாமேலாப்புதனுச்சந்தரிக்குந்தன்யோகபலன்
காமவனிதையிச்சிக்குங் கருணையுள்ளசௌந்தரியன்
தோமேனேக்கமந்திரியாய்த் துலங்கும்விஞ்சதிமேலெட்டே. ()
எட்டுவருஷம் பதினைந்தினிதன்மேல்யோகங்கலாநிதியாம் •
மட்டேசென்மஞ்சார்ங்கிசத்தில்வரவேயொன்பான்சென்மமுறத்
தொட்டதாவாதியாசனுடன் துலங்குமஞ்சுற்ப்பத்தாதி
யொட்டியிருக்கலாபத்திலோங்கு மரசன்வெகுதேசம். (10?)
தேசக்குருவுக்கொருமூன்றிற் செறிந்தேசுங்கன்தானிருக்க
வாசஞ்சுங்கற்கொன்பதினில் மதிதானுறவேபத்தாதி
நேசம்நாலுறத்தனவானும் திருபனுகிமூவொன்பான்
போசனெனவேமூவாண்டு பொருந்துநாகநாடரசே . (104)
அரசேலாபரெண்டொன்பனுதியவரவர்தம்மனையிற்
சிரசாயிருக்கமலாயோகம் சேனைக்கதிபதிபூபாலன்
புரவேகீர்த்திக்கதிபதியும் பூமிக்கரசனமைச்சனுமாய்
தரைசேர்முப்பத்தாறின்மேல் எட்டுவருஷந்தான்செயமே. (105)

செயமேமேஷஞ்சென்மமதாய்ச் செங்கதிருறவேசனிபத்தில
தயவாயிருக்கவொன்பதனிற் குருவுமதியுந்தானுறவே
நயமேவிபாவசுகயோகன்பலன் நடக்குந்தனவான்தேசாதி
கயமும்நடத்தும்பதினுல்மேல் கண்டவருடம்பதினைந்தே. (106)

*   *   *   *

31c. உள்ளமுடையான் மூலமும் உரையும்.

Beginning :

வெள்ளைத்திருநிறத்தாய் வெண்டாமரைமேலாய்
கொள்ளக்குறையாதகோமளமே—யுள்ளி
லுரைப்பார்கள் நெஞ்சமெல்லாமுருவப்புக்கெ
னிருப்பாரிடமாகவின்று. (1)

உலகொருமூன்றுமேத்த வுயர்மறைநான்குமெண்ணெண்
கலைகளுந்தெரியுமங்கே மறையுவர்க்கிசைந்தபோற்ற
பொலன்மவியவருநின்ற பூவணம்வீசப்பொன்னார்
மலரடிபணியவென்றென் மனத்தனமுடியுமாதோ.

எ - து. கடவுள்வாழ்த்து.

மாதவர்முன்புசொன்ன வடமொழிக்கணிதநூலை
தீசறுதமிழிலேசெப்ப நானிசைந்தன்போல
வேதமுங்கலைகளாறு மங்கமுங்கருவிபூம
ஞோதியிவ்வுலகுக்கேற்க வுரைப்பனென்றிசைந்ததொப்பாம்.

End :

மாப்புகரிற்புகாஞானமகள்பூதி மணம்பேறுவளர்கதிர்கண்
வயிறுநோய் மனமிடிவான்சிறையாங்
கோப்புமதிபகைமிடிநோய் கொடுமைகுற்றங்குசன்போகங்
கோதையாமண்பொருள் பெரும்பாம்பிடர்நோய்
காப்பில்மாகாலேநோய் குருப்பொருள்பெண்கூடுங்
காரிநலம்பெண்கூட்டங் காவரிசாறகருமம்
பூப்புதனிலாசரற் பெண்பகையுமுறவாம்
பொருகேதுக்கெலாமுறவு பொன்றிடும் பொன்னழிவாம்.

எ - து. சுக்கிரன்திசையாண்டு 20 - ல் சுக்கிரன் அபகாரம் நாள் 120-க்குப்பலம். ஞானந்தவம் ஸ்திரீகூட்டம் பெண்பேறு அர்த்தலாபம் பூமிபேறு சுகம் புகழுங் கீர்த்தியும் உண்டாம். ஆதித்திய நாள் 360-க்கு கண்ணோவு வயிற்றுநோவு, சுரம் மனமிடி சிறைதளேயுமுண்டாம். சந்திரன்நாள் 600 - க்கு பகை மிடிவியாதி கொடுமை குற்றஞ் சர்வரோகமுங் குற்றமுமுண்டாம். செவ்வாய்நாள் 420-க்குப் போகம்

பெண்பேறு பூமிப்பேறு அர்த்தலாபம். இராகுநாள் 1080-க்கு இடர் வியாதி காமாலே தலைநோவு அர்த்தநாசம் சரீரக்கிலேசம் உறக்கமுமுண்டாம். வியாழநாள் 960-க்கு தனதான்னியசமிர்த்தி வஸ்திராபரணமுண்டாகை உத்தமம் ஸ்திரிபரிகரிக்கை ராஜப்பிரியம் மனப்பிரியம் சௌந்தரிய முண்டாகை. சனிநாள் 1411-க்கு நன்மை இராசாவாலே பலமுண்டாம் சத்துருநாசம் ஸ்திரிசெற்றியுண்டாம். புதனபகாரம் நாள் 1020-க்கு ராசசேவையா லாக்கம் தனதானியசம்பத்துண்டாகை சத்துருசங்காரம் தோழமையுறவு நினைத்தகாரியமெல்லாஞ் சாதிக்கும். கேதுநாள் 420-க்கு கலகம் விஷபயம் அக்கினிபயம் புத்திரமித்திரகளத்திரநாசம் அர்த்தஹானி காரியஹானியுண்டாமென்றவாறு.

சுக்கிரன் திசை முற்றும்.

அந்தராந்தர தசைகொள்ளும்படி ஒருகோளுக்கு அபகரிக்கு நாளின்னதென்றறிந்து அந்தத்தொகையை 120-க்கீந்து கண்ட ஈவு ஓராண்டுக்குவரும் அவை இன்னதென்றறிந்து ஆண்டுதோறு மேற்றி வருநாளை யறிந்து முன்போலே பலாபலஞ்சொல்லுவது.

அந்தராந்தரதிசை முற்றும்.

* * * *

31d. கிரஹஸ்புடம் மூலமும் உரையும்.

Beginning :

பொன்னவனனையமுன்னோர் பொருந்தியநவகோளெண்ணம்
பன்னியவடநூலாற்செய்பாகிதப்பனுவல்தன்னை
மன்னியதமிழிலே மண்ணுளோர்க்கறியும்வண்ண
மன்னமென்னடையினுய்கேளுரைசெய்வனழிவில்லாமல்.

எ - து. பிருகஸ்பதியேயனைய வித்துவான்களாலே நவக்கிரகங்களையும் எண்ணத்தக்கதாகச் செய்யப்பட்ட பாகிதமென்கிற சாத்திரத்தையெல்லாம் பூமியிலுண்டான பிராணிகளுக்கு அறியத்தக்கதாகத் தமிழிலே யுரைசெய்வேன். எ-று. (375)

End :

விளங்கியசகரனுண்டாயிரத்தொருநூற்றின்மிக்க
வளம்புகழ்பாண்டமங்கை மாமுனியரியவன்சே
யிளங்கொடிமடவார்காம னிசைத்திருக்கோட்டிநம்பி
யுளம்புகக்கணிதநூலை யுரைத்தன னுலகுக்கெல்லாம்.

எ-து. சகாத்தம் 1000 த்தின்கண் விளம்பிஞூல முன்னேயோர் வட மொழியினுற்செய்த சோதிடசாத்திரத்தை யெல்லாம் தென்றமிழினுலே விரித்து யாவர்க்கும் உளங்கோள உரைத்தான், வெண்பக்குடிநாட்டுப் பிறமதேசமென்னும் பாண்டமங்கலமாகிய பஞ்சவனமாதேவி சதுர்வே தமங்கலத்து அரியவன் புத்திரன் திருக்கோட்டியூர் நம்பியென்றவாறு.

ஓராதெழுதினேனுனு மொண்பொருளை
யாராய்ந்துகேட்க வறிவுடையோர்—சீராகக்
குற்றங்களைந்து குறைபெய்துவாசித்தல்,
கற்றறிந்த மாந்தர்கடன்.

INDEX OF THE NAMES OF WORKS, AUTHORS, KINGS AND OTHER HISTORICAL PERSONAGES.

[The numbers refer to pages.]